Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7:00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 13, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038
(சி/2485)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 09 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 05 (24.07.2004) சனிக்கிழமை இதழ்:274

# புலிகள் மீதான தடையை நீக்குவதற்கு பெரும்பான்மை தமிழக மக்கள் ஆதரவு

## கருத்துக் கணிப்பில் தெரியவந்தது

(சென்னை)

இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கவேண்டும் என தமிழகம் தழுவியரீதியில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் பெரும்பான்மையானோர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்தியாவில் அண்மையில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரான அரசியல் நிலவரங்கள் குறித்த பொதுமக்களின் அபிப்பிராயத்தை அறியும் பொருட்டு அந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

தமிழகம் தழுவிய ரீதியில் சென்னை லொயோலாக் கல்லூரி மாணவர்களால் இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

நடிகர்கள் ரஜினிகாந், விஜயகாந் ஆகியோரின் அரசியல் நிலை, விடுதலைப் புலிகளின் மீதான தடை நீடிப்பு, புதிய இந்திய அரசியல் பற்றிய கருத்துக்களை அறியும் நோக்கில் இந்தக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது.

இதில் இந்தியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை அரசாங்கம் நீக்க வேண்டும் என்று 54.2 வீதமானோர் கருத்து வெளியிட்டுள்ளனர். புலிகள் மீதான தடை தொடரவேண்டும் என்று 45.8 வீதமானோரே கருத்துத் தெரிவித்திருப்பதாகவும் இந்தக் கருத்துக்கணிப்பு முடிவுகளில் இருந்து தெரியவந்தாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல், கருணா விவகாரம்

# சமாதானப் பேச்சினை ஆரம்பிக்க இவையே சிக்கலாக உள்ளதாம்!

### அரச சமாதான செயலகப் பணிப்பாளர் கூறுகிறார்



(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிப்பது மற்றும் கருணா விவகாரம் என்பன, சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிப்பது தொடர்பான விடயத்தில் சிக்கல்களைத் தோற்றுவித்திருப்பதாக –**

**அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபால தெரிவித்தார்.**

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கும் திகதி மற்றும் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக விடுதலைப் புலிகளால் அரசாங்கத்திடமிருந்து எழுத்துமூல இணக்கப்பாடு கோரப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் கடந்த ஜூன் மாதத்தில் ஜனாதிபதி சந்திரிகா நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில், இது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளார்.

வடக்கு - கிழக்கு புனர்நிர்மாணம் மற்றும் உடனடி மனிதாபிமான தேவைகள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக பேச்சுவார்த்தையை நடத்த அரசாங்கம் தயாராகவுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஆதரவாளர் ஒருவர் கதிரவெளியில் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கதிரவெளிப் பகுதியிலுள்ள புளியங்கண்டி என்னுமிடத்தில் வைத்து நேற்றுக் காலை தமது ஆதரவாளர் ஒருவர் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர் சீனித்தம்பி மகாலிங்கம் (வயது-28) எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழீழ தேசியத்தை பாழடையச் செய்யும் நோக்குடன் செயற்படும் இந்த தேசவிரோதிகளை இனங்கண்டு, இவர்களை எம்மத்தியிலிருந்து வெளியேற்றவேண்டியது தேசப்பற்றுள்ள ஒவ்வொருவரதும் தலையாய கடப்பாடாகுமென இந்தக் கொலை தொடர்பாக விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட ஊடகப்பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட சீனித்தம்பி மகாலிங்கத்தின் குடும்பத்தினருக்கு தமது அனுதாபத்தையும் விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். (07)

## சடலத்துடன் ஈ.பி.டி.பி. ஆர்ப்பாட்டம்!

(கொழும்பு)

கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை ஈ.பி.டி.பியினர் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

அக்கரைப்பற்றில் சுட்டுக்கொல்லப்பட்ட ஆலையடிவேம்பு பிரதேச சபைத் தலைவர் ரவீந்திரனின் சட

(12 ஆம் பக்கம் பார்க்க)

### திருகோணமலையில் நேற்று நடைபெற்ற

## படையினர் – புலிகள் சந்திப்பின்போது புரிந்துணர்வுடன் செயற்பட இணக்கம்!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் யுத்த நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கும் தற்போதைய சமாதான சூழலில் மாவட்டத்தில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் தொடர்பாக கலந்து பேசுவதற்கும் விடுதலைப்புலிகளும், படைத்தரப்பினரும் இணக்கம் கண்டுள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களுக்குப் பின்னர் நேற்று திருமலை மாவட்டக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் நடந்த சந்திப்பிலேயே இரு பகுதியினரும் இந்த இணக்கத்தை ஏற்படுத்தினர். மாவட்டக் கண்காணிப்புக் குழுத்தலைவர் கேட்ஸ்பர் தலைமையில் நேற்று மாலை 3.30 மணி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றோல் விலை 8 ரூபாவால் அதிகரிப்பு

பெற்றோலின் விலை எட்டு ரூபாவால் நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதை அடுத்து குடாநாட்டில் பெற்றோலுக்கு செயற்கைத் தட்டுப்பாடு ஏற்பட்டது.

ஒரு லீற்றர் பெற்றோலின் விலை நேற்று நள்ளிரவு முதல் எட்டு ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### சிவராமின் இல்லத்தை

## பொலிஸார் சோதனையிட முயற்சி

(கொழும்பு)

பிரபல ஊடகவியலாளரும் இராணுவ ஆய்வாளருமான டி.சிவராமின் இல்லத்தை கல்கிசை பொலிசார் நேற்று முன்தினம் சோதனையிட முற்பட்டதாகவும், அவர் இதற்கு அனுமதிக்காததையடுத்து அவர்கள் திரும்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதேசவாதம் பேச முற்பட்டவர் எவருமே வெற்றி பெறவில்லை

### கொழும்பு செய்தியாளர் மாநாட்டில் ஜோசப்

(கொழும்பு)

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக கட்டிக்காக்கப்பட்டு வந்திருக்கின்ற தமிழ்த்தேசியம் கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து வலுப்பெற்று வந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

கருணா விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து விலகிச் சென்றதை அடுத்து கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் வன்முறைகள் பற்றி கிழக்கு மாகாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட தமிழ்த்தேசிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

### பொன்னம்பலம் மருத்துவமனை

## புதிய கட்டடத்தொகுதி திறந்து வைப்பு

(கிளிநொச்சி)

புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனையில் புதிய கட்டடத் தொகுதியை தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று திறந்து வைத்தார்.

டொக்டர் சிவபாலன் தலைமையில் நேற்றுக்காலை 10 மணிக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# சமூகச் சீர்கேடுகளைத் தடுப்பதற்கு விடுதி உரிமையாளர்கள் தீர்மானம்

யாழ்.மாவட்டத்திலுள்ள பயணிகள் விடுதிகள் சிலவற்றில் சமூகச் சீர்கேடுகள் நிலவிவருவதாகவும் இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது பற்றி யாழ்.மாவட்ட விடுதிகள் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டப் பயணிகள் தங்கும் விடுதிகள் சங்கப் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய நடுவப்பணிமனையில், விடுதிகள் சங்கத் தலைவர் இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

விடுதியின் நடவடிக்கைகள், செயற்பாடுகள் தொடர்பாக யாழ். மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியப் பணிப்பாளர் சுதாஸ் உரையாற்றினார்.

இந்தக் கூட்டத்தில்- விடுதிகள் நடைமுறை விதிகளுக்கு அமையச் செயற்படல், சங்கத்தில் பதிவு செய்யாத விடுதிகளை உடன் பதிவை மேற்கொள்ள வேண்டும் என்றும், பதிவை மேற்கொள்ளாதவர்கள் எதிர்காலத்தில் இயங்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும், பயணிகள் விடுதிகளிலும் சமூகச் சீர்கேடுகள் உள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளன.

எதிர் காலத்தில் சமூகச் சீர்கேடுகள் விடுதிகளில் நடைபெறுவதைத்தடுக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விடுதிகள் இயங்கும் போது அயலவர்களுக்கு இடையூறு இல்லாமல் இருக்க வேண்டுமென்றும் திர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(சுன்னாகம்)

யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் 6 பேர் பங்கு பற்றும் 5 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 9.00 மணிக்கு சென்ரலைட்ஸ் சொக்ஸ் அணிக்கும் யங்ஸ்ரார் மஞ்சள் அணிக்கும் இடையிலான போட்டியும்,

யங்ஸ்ரார் பச்சை அணிக்கும், மானிப்பாய் பரிஸ் அணிக்கும் இடையிலான போட்டியும் நடைபெறவுள்ளன.

இன்று காலை 10.00 மணிக்கு கே.சி.சி அணிக்கும் பல்கலைக்கழக 'பி' அணிக்கும் இடையிலான போட்டியும்,

ஓல்ட்கோல்டன் அணிக்கும் பல்கலைக்கழக 'ஏ' அணிக்கும் இடையிலான போட்டியும் இடம்பெறும்.

இன்று காலை 11 மணிக்கு கிறாஸ்கொப்பர்ஸ் 'ஏ' அணிக்கும் சென்ரல் அணிக்கும் இடையிலான போட்டியும்,

குறொஸ் கொப்பர்ஸ் அணிக்கும் ஸ்ரான்லி அணிக்கும் இடையிலான போட்டியும் நடைபெறவுள்ளன.

இதையடுத்து நாளை நண்பகல் 12 மணிக்கு இரண்டு காலிறுதி ஆட்டங்களும் பிற்பகல் 1 மணிக்கு இரண்டு காலிறுதி ஆட்டங்களும் இடம்பெறும்.

நாளை இரண்டு அரையிறுதி ஆட்டங்களும், இறுதிப்போட்டியும நடைபெறுமெனவும் அறிவிக்கப்பட்டது.

# சட்டவிரோதமாக சாராயம் விற்ற 4 பேருக்கு 31 ஆயிரம் குற்றப்பணம்

அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமாகச் சாராயம் விற்ற நால்வருக்கு 31 ஆயிரம் ரூபா குற்றப் பணமாகச் செலுத்துமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அரியாலை, யாழ்.நகர், உரும்பிராய் ஆகிய பகுதிகளில் சட்டவிரோதமாகச் சாராயம் விற்ற இந்த நபர்கள் நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றில் பொலிஸாரால் ஆஜர் செய்யப்பட்டனர்.

இந்த நபர்களிடம் குற்றப் பணத்தினை தர்மப்பணமாகவும், தண்டப் பணமாகவும் செலுத்த வேண்டுமென்றும், தர்மப்பணத்தினை யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்திற்கும், சிறுவர் பாதுகாப்புக் குழுவுக்கும் செலுத்துமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

## நூல்தேட்டம் 2 அறிமுகவிழா

இலங்கை எழுத்தாளர்களின் படைப்புக்களின் நூல் தொகுப்பின் நூல்தேட்டம் 2 இன் அறிமுக விழா இன்று மாலை 4.00 மணிக்கு யாழ். பொதுநூல் நிலைய மண்டபத்தில்

யாழ்.மாநகர ஆணையாளர் இராமலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நூலின் முதற்பிரதி கடந்த மாதம் ஜேர்மனியில் வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

சாவகச்சேரி நகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் இன்று நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளது. இதனால் வீட்டு நாய்களைக்கட்டி வளர்க்குமாறு சாவகச்சேரி நகரசபை சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (29)

# கரவெட்டி கோட்டப் பாடசாலைகளின் தமிழ் மொழித்தின போட்டி முடிவுகள்

(நெல்லியடி)

கரவெட்டி கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட தமிழ் மொழித்தினப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் வலய மட்டப் போட்டிக்குத் தோற்றவுள்ளனர்.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரத்தின் நேற்றைய தொடர்ச்சி வருமாறு:

### கவிதையாக்கம்

முதலாம் இடம் - மு.சிவகௌரி (ஞானாசாரியார் கல்லூரி).

இரண்டாம் இடம் - கு.பிரதீபா (விக்னேஸ்வரா கல்லூரி).

### சிறுகதை

முதலாம் இடம் - யோ.கௌசலா (தேவரையாளி இந்துக் கல்லூரி).

இரண்டாம் இடம் - ம.சுஜிதா (வடமராட்சி மத்திய கல்லூரி).

மூன்றாம் இடம் - த.சரண்யா (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி).

### பாவோதல்

முதலாம் இடம் - செ.சோபனா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம் - ம.றஜிந்தா (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி).

மூன்றாம் இடம் - த.சுவர்ணமுகி (தேவரையாளி இந்துக் கல்லூரி).

### இசை தனி

முதலாம் இடம் - ம.பிரசாந் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி).

இரண்டாம் இடம் - கோ.லாவண்யா (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்).

மூன்றாம் இடம் - கி.பிரிசாந்தினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

### நடனம் தனி

முதலாம் இடம் - சு.ஜிவராணி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

இரண்டாம் இடம் - கிறிஸ்ரினா வேர்ஜினி (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்).

### குறு நாடகப் பிரதி ஆக்கம்

முதலாம் இடம் - ந.சிவதாரனி (ஞானாசாரியார் கல்லூரி).

இரண்டாம் இடம் - தி.சரண்யா (விக்னேஸ்வரா கல்லூரி).

மூன்றாம் இடம் - க.மயூரி (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி).

### குழு நிகழ்ச்சிகள் திறந்த போட்டிகள்

#### இசை குழு - I

இமையாணன் அ.த.க.பாடசாலை, உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, விக்னேஸ்வரா கல்லூரி.

#### இசை குழு - II

வல்வெட்டி இ.த.க.பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

#### நடனம் குழு - I

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், விக்னேஸ்வரா கல்லூரி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி.

#### நாட்டிய நாடகம்

எவரும் பங்குபற்றவில்லை.

#### நாடகம்

கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம், கட்டைவேலி யார்க்கரு வித்தியாலயம், விக்னேஸ்வரா கல்லூரி.

#### வில்லுப்பாட்டு

எவரும் பங்குபற்றவில்லை.

#### விவாதம்

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.

#### தமிழறிவு வினாவிடை

விக்னேஸ்வரா கல்லூரி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, இமையாணன் அ.த.க.பாடசாலை.

#### சிந்து நாடகக் கூத்து

உடுப்பிட்டி அ.மி.கல்லூரி, இமையாணன் அ.த.க.பாடசாலை.

#### விசேட கூத்து

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி. (13)

(முற்றும்)

## சாரையடி வேளாங்கன்னி உற்சவ நிகழ்வு

சாரையடி புனித வேளாங்கன்னி ஆலயத்தின் உற்சவம் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்று மாலை திருச்சொரூப ஆராதணையும், நாளை காலை 7 மணிக்கு, கரவெட்டி பங்குத்தந்தை மகன் அலோசியஸ் திருநாள் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்.

# மானிப்பாய் - சுழிபுரம் பிரதேசசபை உத்தியோகத்தர்களுக்கான விளையாட்டுப் போட்டி

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை - வலிகாமம் மேற்கு சுழிபுரம் பிரதேசசபையின் உத்தியோகத்தர்களுக்கும் இடையேயான சிநேகபூர்வமான கிரிக்கெட்போட்டி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தப்போட்டியில் ஆண், பெண் இருபாலாருக்குமான கயிறு இழுத்தல் போட்டி மற்றும் ஏனைய நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது.

எனவே பிரதேசசபை ஊழியர்களை இந்தப்போட்டியில் பங்குபற்றுமாறு மானிப்பாய் பிரதேசசபையின் செயலாளர் பி.விக்டர் தெரிவித்தார். (100)

# யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 41 ஆவது விளையாட்டுப் போட்டி

(மானிப்பாய்)

வடமராட்சி கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 41 ஆவது விளையாட்டுப் போட்டி இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது.

இன்று காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் விளையாட்டு நிகழ்வுகளில் சைக்கிளோட்டம், மரதன் ஓட்டம், விநோத உடைப்போட்டி ஆகியன நடைபெறவுள்ளன.

நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகும் விளையாட்டு நிகழ்வுகளில் - ஆண்களுக்கான அஞ்சல் ஓட்டம், பெண்களுக்கான அஞ்சல் ஓட்டம், பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டம், ஆணகளுக்கான 1500 மீற்றர் ஓட்டம் மற்றும் கயிறு இழுத்தல், கிறீஸ் கம்பம் ஏறுதல் ஆகியனவும் நடைபெறவுள்ளன.

இறுதியாக வெற்றிபெற்ற வீர, வீராங்கனைகளுக்கான பரிசளிப்பு வைபவமும் நடைபெறும். (100)

## தடகள விளையாட்டுப் போட்டி

வலி.மேற்கு பிரதேசசபையும், சனசமூக நிலைய சமாசமும் இணைந்து நடத்தும் தடகள விளையாட்டுப் போட்டி இன்று காலை 9.30 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விளையாட்டில் - 45 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான வேக நடை, பலூன் உடைத்தல், 100 மீற்றர் ஓட்டம், கயிறு இழுத்தல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (100)

## பௌதிகவியல் ஆசிரியருக்கான இலத்திரனியல் செயலமர்வு

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் அனுசரணையுடன் கல்விப் பொதுத் தாரதர உயர்தர வகுப்பில் பௌதிகவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இலத்திரனியல் கருத்தரங்கு இன்று யாழ்.பல்கலைக்கழக பௌதிகவியல் துறை மண்டபத்தில் காலை 9 மணி தொடக்கம் 4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் உயர்தர வகுப்பில் பௌதிகவியல் பாடத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் இந்தக் கருத்தரங்கில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் கேட்டுள்ளார்.


# லெப்.செல்லக்கிளி அம்மானின் நினைவு நாள் நிகழ்விலிருந்து



பொதுச்சுடரினை ஏற்றும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணன்.



தேசியக்கொடியை ஏற்றும் யாழ்.மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் சி.இளம்பரிதி.



பொதுச்சுடரினை ஏற்றும் தென்மராட்சி அரசியற்துறை பொறுப்பாளர் கலைவாணன்.



நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரைக் காணலாம்.

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

அரியாலை, கனகரட்ணம் வீதியைச் சேர்ந்த ச.சௌதாமினி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (596674216 V) பருத்தித்துறைக்கும் யாழ்.நகருக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் 'நமது ஈழநாடு' காரியாலயத்திலோ அல்லது நேரிலோ ஒப்படைக்கும்படி தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். (சி/2777)

நிறஞ்சனாஸ் சங்கானை
பிரகாஷ்ராஜ், கலாபவன்மணி நடித்த
நாம்
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே)
Random Hearts
(சி-2723)

நாகம்ஸ் சுன்னாகம்
சிம்பு, ரம்யா, கருணாஸ், மனோரமா நடித்த

குத்து
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.
சரத்குமார், சாக்ஷி, விஜயகுமார், சுஜாதா, வடிவேலு நடித்த

காட்சிநேரம்:-10.30, 2.30 6.30, 9.3 (பு.நே)
மானஸ்தன்
(சி-2725)

# கருணாவை ஒப்படைக்க வேண்டுமென விடுதலைப் புலிகள் நிபந்தனை விதிக்கலாம்

## அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே



(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து நீக்கப்பட்ட கருணாவை ஒப்படைக்கவேண்டும் என்ற கோரிக்கையையும், பேச்சுவார்த்தைக்கான நிபந்தனையாக விடுதலைப் புலிகள் முன்வைக்கலாம் என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் பேசிய அவர் -

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், எதிர்காலத்தில் அரசாங்கத்தை ஆதரிக்க இணக்கம் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த நிலையில் அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் சட்டமூலங்களுக்கு எதிராகச் செயற்படப் போவதில்லை எனவும் தீர்மானித் திருக்கின்றனர். குறிப்பாக வரவு - செலவுத் திட்டத்தின் போது அரசாங்கத்தை ஆதரிபபதாக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணங்கியதாக அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே இந்த ஊடகவியலாளர் மகாநாட்டில் தெரிவித்தார். (01)

# சமாதானப் பேச்சுக்கு உயிர்கொடுக்க ஹெல்கிசன் நாளை கொழும்பு வருகிறார்

## தேசியத் தலைவரையும் சந்திப்பாராம்

(கொழும்பு)

அரசுக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது குறித்துத் தீர்மானம் ஒன்றை எடுப்பதாக நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் நாளை இலங்கை வரவுள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சமாதான செயலகத்தின் தலைவர் ஜெயந்த தனபால ஆகியோரின் விசேட அழைப்பின் பேரிலேயே இவர் இலங்கை வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்புக்கு வந்தவுடன் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்திக்கும் ஹெல்கிசன், பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்துப் பேச்சு நடத்துவார். மறுநாள் கிளிநொச்சிக்கு செல்லும இவர் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனையும் சந்திக்கத் தீர்மானித்துள்ளதாகக் கொழும்பு சமாதான செயலகத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு ஆட்சிக்கு வந்த பின்பு இரு தடவைகள் இலங்கைக்கு வந்த இவர் - மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதன் பொருட்டு, பலமான முயற்சிகளில் ஈடுபட்டும் அது பலனளிக்கவில்லை.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து, அரசு தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தாமையே இதற்குக் காரணம் எனச் சொல்லப் படுகிறது.



இந்த நிலையில் நாளை கொழும்புக்கு வரும் இவர், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் இறுதி மற்றும் தீர்க்கமான நடவடிக்கைகளில் ஈடுபடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (தே)

# புலிகள் - அரசு பேச்சுக்கு உதவ இந்திய அரசு மறுப்பு

## இந்திய ஊடகம் தகவல்

விடுதலைப் புலிகளுக்கும் - அரசாங்கத்துக்கும் இடையே நேரடிப் பேச்சுவார்த்தைகளை நடத்த உதவுவதற்கு இந்திய அரசாங்கம் மறுப்புத் தெரிவித்திருக்கிறது.

சமாதான முயற்சிகளில் அனுசரனை வழங்கிவரும் நோர்வேயை இந்த முயற்சிகளிலிருந்து தவிர்க்கும் நோக்கத்தோடு, விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்திய அரசாங்கம் உதவவேண்டும் என்று, அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ விடுத்திருந்த கோரிக்கையை இந்தியத் தலைவர்கள் நிராகரித்து விட்டதாக, இந்திய ஊடகமொன்று தெரிவித்திருக்கிறது.

விடுதலைப் புலிகளை இந்திய அரசாங்கம் தடை செய்திருக்கும் காரணத்தால், இந்த முயற்சியில் இந்திய அரசாங்கத்தினால் சட்டரீதியாக ஈடுபடமுடியாதென மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சித்தலைவர் சோனியா காந்தி, இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என். டிக்ஷித் ஆகியோரும் மஹிந்த ராஜபக்ஷவின் கோரிக்கையை நிராகரித்திருப்பதாகவும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை - இலங்கையின் பாதுகாப்புத் தொடர்பான விடயத்தில் கூடுதல் ஒத்துழைப்பு வழங்க இந்திய தலைவர்கள் உறுதியளித் திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பான புலனாய்வு தகவல்களை இலங்கையுடன் பரிமாற்றம் செய்துகொள்வதற்கு தேசிய பாதுகாப்பு ஆலோசகர் உறுதியளித் திருக்கிறார்.

இதேவேளை, பாதுகாப்புத்துறையின் நடவடிக்கைளைத் துல்லியமாக கண்காணிக்கும் வல்லமை கொண்ட நவீன தொழில்நுட்ப உபகரணங்களை விடுதலைப் புலிகள் பயன்படுத்தி வருவதுபோன்ற பல தகவல்களை இந்திய புலனாய்வுத் துறை இலங்கை இராணுவத்துக்கும் தெரிவித்திருப்பாகவும் அந்த ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

### மருந்துகள் கிடைத்தன

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் ஆயுர்வேத வைத்தியசாலைக்கான, 8 இலட்சம் ரூபா பெறுமதியான மருந்துகள் கிடைக்கப்பெற்றிருப்பதாக யாழ்.மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவை யாழ்.மாநகரசபைக்குட்பட்டு இயங்கும் 8 ஆயுர்வேத வைத்திய சாலைக்குப் பகிர்ந்தளிக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# இந்த வருட இறுதிக்குள் புதிதாக 23 அஞ்சல் கட்டடங்கள் அமைப்பு

இலங்கை முழுவதும் 23 புதிய அஞ்சலகக் கட்டங்களை இந்த வருட இறுதிக்குள் கட்டி முடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித் துள்ளது.

தற்போது அஞ்சல் திணைக்களத்துக்குரிய அஞ்சல் அலுவலகங்களில் 203 தனியார் கட்டடங்களில் இயங்கிவருகிறது.

இதனால், அரசுக்குப் பெருந்தொகைப் பணம் செலவாகிறது. இதனைத் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக, அஞ்சல் தொலைத் தொடர்பு மற்றும் மலையக அபிவிருத்தி அமைச்சர் டி.எம்.ஜெயரத்ன தெரிவித்தார்.

இதற்கான ஆரம்ப கட்டப் பணிகளை ஆரம்பிப்பதன் பொருட்டு, மத்திய பொறியியல் நிர்மாணப் பிரிவு மற்றும் அஞ்சல் திணைக்களம் ஆகியவற்றுக்கும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இவ்வாறு அமைக்கப்படவுள்ள அஞ்சலக கட்டடங்களைக் கிராமப் புறங்களிலேயே அமைக்கத் தீர்மானித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

## ரவி கருணாநாயக்க மீதான

# விசாரணை அறிக்கை சட்ட மா அதிபரிடம்!

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க நம்பிக்கைக்குப் பாதிப்பு ஏற்படும் வகையில் அரச நிதியைக் கையாண்டார் என்னும் குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணை அறிக்கை சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மனு விசாரணை கொழும்பு நீதிவான் சரத் கே.கருணாரத்ன முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது - கொழும்பு ஊழல் மோசடிக் குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் இதனைத் தெரிவித்தனர்.

இந்த வழக்குத்தொடர்பான மேலதிக விசாரணைகள் நவம்பர் 8 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



ரவிகருணாநாயக்க, வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சராகப் பதவி வகித்தபோது அமைச்சுக்கான கட்டடம் ஒன்றை குத்தகைக்கு எடுக்க ஒரு கோடி 56 லட்சம் ரூபாவை முறைகேடாகச் செலவிட்டார் என கொழும்பு ஊழல் மோசடி குற்றத் தடுப்புப் பொலிஸாரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது..

## ஈ.பி.டி.பி உறுப்பினரைப் பாதுகாக்கத் தவறியதாக

# பொலிஸார், கிராம அலுவலர் பணியிலிருந்து இடைநிறுத்தம்

(மட்டக்களப்பு)

அம்பாறை ஆலையடி வே:ம்பு பிரதேச சபைத் தலைவர் வேலாயுதம் ரவீந்திரன்கொலை செய்யப்பட்ட வேளையில், அவருக்குப் பாதுகாப்பு வழங்கிய பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஆகியோரின் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இவர்கள் இருவரும் சம்பவம் இடம்பெற்ற வேளையில் எந்தவித பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை எனத் தெரியவந்ததை அடுத்தே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# டெங்கு நோயை கட்டுப்படுத்த தேசிய ரீதியில் செயற்திட்டம்!

டெங்குக் காய்ச்சல் பரவுவதைத்தடுக்கத் தேசிய ரீதியான செயற்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் முப்படையினர் உட்பட பல்வேறு அமைப்புக்களின் அனுசரணையுடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் அவர் அறிவித்தார்.

இந்தத் திட்டத்துக்கு இன, மத பேதமின்றி அனைத்து மக்களும் ஒத்துழைப்புவழங்க வேண்டுமெனத் தெரிவித்த அவர், நாட்டில் 60 பேர் டெங்கு காய்ச்சலினால் இறந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# 2005 ஆம் ஆண்டுக்குரிய சீருடைத் துணி கொள்வனவுக்கு அமைச்சு நடவடிக்கை!

(கொழும்பு)

2005 ஆம் ஆண்டுக்கான பாடசாலை மாணவர் சீருடைத்துணிகளுக்கு கல்வி அமைச்சு 11 உள்ளூர் நிறுவனங்களிடம் கொள்வனவுக் கட்டளைகளை வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை மாணவ, மாணவிகளுக்கான சீருடைக்கென மொத்தம் 9.3 மில்லியன் மீற்றர் துணியைக் கொள்வனவு செய்வதற்குக் கட்டளை வழங்கப்பட்டிருக்கிறது.

இதில் 1.3 மில்லியன் மீற்றர் துணியை உள்ளூரில் தயாரிக்கவும், 7.95 மில்லியன் மீற்றர் சீருடைத் துணியை இறக்குமதி செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சீருடைத் துணியின் அளவைக் குறைப்பதே அரசாங்கத்தின் திட்டமாகும். இந்தத் திட்டம் படிப்படியாக அமுல் செய்யப்படவுள்ளது.

இதுவரை பிரதேச செயலகம் ஊடாக கிராமசேவகர்கள் மூலம் வழங்கப்பட்டு வந்த சீருடைத் துணிகளை இனிமேல் பாடசாலை அதிபர் மூலம், பெற்றோரிடம் வழங்கவும் திடடம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஹெல உறுமயவின் பிரேரணையை நிராகரிக்கக்கோரி நீதிமன்றில் மனு

நாடாளுமன்றத்தில் ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்கள் சமர்ப்பித்த பிரேரணை, இலங்கையின் அரசியலமைப்புக்கு முரணானது என்று அறிவிக்குமாறு- மூவர், உச்ச நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் சங்கைக்குரிய ஓமல்பே சோபித தேரர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த மத மாற்றத் தடைச் சட்டப் பிரேரணை குறித்து இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது இலங்கை அரசியலமைப்பின் 10 ஆவது சரத்தை அவமதிப்பதென மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

10 ஆவது சரத்தில் இந்த நாட்டிலுள்ள அனைவரும் தத்தமது மதங்களைப் பின்பற்றும் உரிமைகளைக் கொண்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

முறைப்பாடு செய்திருப்போர், இந்தப் பிரேரணையை அங்கீகரிப்பதாயின் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றாக வேண்டும் என்று அறிவிக்குமாறும், உச்ச நீதிமன்றத்தைக் கேட்டிருக்கின்றனர்.

# அமெரிக்காவுடன் ஒப்பந்தம் கைச்சாத்து


(கொழும்பு)

துறைமுகங்கள் மற்றும் கப்பல்களைத் தீவிரவாத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதைத் தடுக்கும் ஒப்பந்தத்தில் இலங்கையும், அமெரிக்காவும் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த உடன்படிக்கையில் - அமெரிக்காவின் எரிசக்தி அமைச்சின் செயலாளர் ஸ்பென்சர் ஏபிரகாமும், இலங்கையின் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் மங்கள சமரவீரவும் நேற்று முன்தினம் கைச்சாத்திட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, கப்பல்கள் மற்றும் துறைமுகங்களுக்குப் பாதுகாப்பு வழங்கி, அதனூடாக தீவிரவாதத்தாக்குதல்களைத் தடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (தே)


# மேற்கிந்தியத்தீவுகளுடனான டெஸ்ட்; வலுவான நிலையில் இங்கிலாந்து!



(லண்டன்)

இங்கிலாந்தின் லோட்ஸ் மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் இங்கிலாந்து அணி வலுவான நிலையில் இருந்தது.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான முதலாவது டெஸ்ட் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி, இங்கிலாந்து




அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தது.

இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான ட்ரஸ் கோதிக்கும், ஸ்ரரசும் அபாரமாக ஆட்டத்தை ஆரம்பித்தபோதும் -

அணி 29 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ட்ரஸ்கோதிக் ஆட்டமிழந்து சென்றார். பெஸ்ட் வீசிய பந்தை அடித்து ஆட முற்பட்டபோது சர்வானிடம் பிடிகொடுத்து இவர் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து ஸ்ரரசுடன் றொபட் கீ இணைந்து ஆட்டத்தைத் தொடர்ந்தார். இங்கிலாந்து அணியின் இந்த ஜோடியின் அபார ஆட்டத்தால் மேற்கிந்தியத்தீவுகளின் பந்துவீச்சாளர்கள் திணறிப்போயினர்.

இரண்டாவது விக்கெட்டுக்கு இவர்கள் இருவரும், இங்கிலாந்து அணி



சார்பில் புதிய சாதனையை ஏற்படுத்தினர். இவர்கள் 291 ஓட்டங்களைக் குவித்தனர்.

அணி 320 ஓட்டங்களைப் பெற்ற நிலையில்தான் இரண்டாவது விக்கெட்டை மேற்கிந்தியத்தீவுகள் பந்து வீச்சாளர்களால் வீழ்த்தமுடிந்தது.

137 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஸ்ரரஸ் பாங்ஸ் வீசிய பந்தை ஜேக்கப்பிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதையடுத்து றொபட் கீயுடன்




இணைந்த அணித்தலைவர் வோகன் ஆட்டநேர முடிவில் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

கீ 225 பந்துகளில் 22 பவுண்டரிகளுடன் 167 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார்.

8[illegible] ஓவர்களில் முதல் நாளில் இங்கிலாந்து அணி 2 விக்கெட் இழப்புக்கு 391 ஓட்டங்களைக் குவித்திருந்தது. இதில் 35 ஓட்டங்கள் உதிரிகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இறுதிப் போட்டியில் நாளை பிரேசில்-ஆர்ஜென்ரீனா மோதல்



கோபா அமெரிக்க கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டம் நாளை பெருவின் தலைநகரான லீமாவில் நடைபெறவுள்ளது.

உருகுவே மற்றும் கொலம்பிய அணிகளை அரையிறுதிப் போட்டிகளில் தோற்கடித்த பிரேசில் மற்




றும் ஆர்ஜென்ரீன அணிகள் இந்த இறுதிப் போட்டியில் மோதவுள்ளன.

உலகக்கிண்ண சம்பியனான பிரேசில் அணியின் நம்பிக்கை நட்சத்திரமான அட்ரியானோ, இந்தத் தொடரில் ஆறு கோல்களை அடித்து முதல் நிலையில் இருக்கிறார்.

இதேவேளை, ஆர்ஜென்ரீன அணியிலும் சிறந்த வீரர்கள் இருப்பது இறுதிப் போட்டியைப் பெரிதும் விறுவிறுப்பாக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, மூன்றாவது இடத்துக்கான போட்டி இன்று நடைபெறவுள்ளது. இதில் மூன்றாவது இடத்துக்காக அரையிறுதிப் போட்டியில் தோல்விகண்ட அணிகளான கொலம்பிய - உருகுவே அணிகள் மோதுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# நியூஸிலாந்துக்கு செல்லும் இலங்கை பங்கேற்கும் ஆட்ட விபரம் அறிவிப்பு!




(வெலிங்டன்)

நியூஸிலாந்துக்கு இந்த வருட இறுதியில் செல்லவுள்ள இலங்கை அணி - ஐந்து ஒருநாள் போட்டித் தொடரிலும், மூன்று பயிற்சி டெஸ்ட் ஆட்டங்கள் மற்றும் இரண்டு உத்தியோகபூர்வ டெஸ்ட் போட்டிகளிலும் கலந்துகொள்ளவுள்ளது

இதற்கான கால அட்டவணையை நியூஸிலாந்து கிரிக்கெட் சபை வெளியிட்டிருக்கிறது.

இதன்படி, டிசம்பர் 21 ஆம் திகதி மத்திய மாவட்ட அணியுடனும், டிசம்பர் 23 ஆம் திகதி வடக்கு மாவட்ட அணியுடனும் மூன்று நாள் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி பங்கேற்கும்.

இதேவேளை, டிசம்பர் 26 இல் ஒக்லாந்தில் முதலாவது ஒருநாள் போட்டியும், அடுத்து 29 ஆம் திகதி நேப்பியரிலும், 2005 ஜனவரி 02 இல் குயின்ஸ்ரவுணிலும், ஜனவரி 4 ஆம் திகதி கிரிஸ்ட்சேர்ச்சிலும், ஜனவரி 8 ஆம் திகதி வெலிங்டனிலும் ஒருநாள் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை, ஒக்லாந்து அணியுடனான மூன்று நாள் டெஸ்ட் போட்டிகளில் இலங்கை அணி 10 ஆம் திகதி பங்கேற்கும்.

ஜனவரி 15, 22 ஆம் திகதிகளில் ஹமில்டன் மற்றும் வெலிங்டனிலும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் இலங்கை அணி நியூஸிலாந்துடன் பங்குகொள்ளும்.

இதேவேளை, அடுத்த ஆண்டு நியூஸிலாந்துக்கு விஜயம் செய்யும் அவுஸ்ரேலிய அணி -

ஐந்து ஒரு நாள் போட்டிகளிலும், மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.


# உதைபந்தாட்டப் போட்டி

தமிழீழ விளையாட்டுத்துறை யாழ்.மாவட்டப் பிரிவின் அனுமதியுடன் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வதிரி தேவரையாளி யங் லயன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று -

பிற்பகல் 3 மணிக்கு டயமன்ஸ் விளையாட்டுக்கழக 'பி' அணியை எதிர்த்து, தொண்டமனாறு ஒற்றுமை விளையாட்டுக்கழகமும், பிற்பகல் 4 மணிக்கு பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன. (13)




# பெக்காம் தவறவிட்ட பந்து 40 லட்சம் ரூபாவுக்கு ஏலம்!



ஐரோப்பிய உதைபந்தாட்டப் போட்டி கடந்த மாதம் போர்த்துக்கலில் நடந்தது. இதன் இறுதிப் போட்டியில் போர்த்துக்கல் - கிரீஸ் அணிகள் மோதின. இதில் கிரீஸ் சம்பியன் பட்டம் வென்றது. இதன் காலிறுதிப் போட்டியில் இங்கிலாந்து - போர்த்துக்கல் அணிகள் மோதின. இதில் இங்கிலாந்து தோல்வியடைந்து போட்டியிலிருந்து வெளியேறியது.

இந்தத் தோல்விக்கு அந்த அணியின் நட்சத்திர வீரர் டேவிட் பெக்காம் தனக்குக் கிடைத்த பெனால்டி வாய்ப்பை கோலாக மாற்றாததுதான் காரணம்.

அவர் அடித்த அந்தப் பந்து இன்டர்நெட் மூலம் - நேற்றுமுன்தினம் ஏலம் விடப்பட்டது. இதைக் கனடா நாட்டைச் சேர்ந்த ஒருவர் 40 லட்சம் ரூபாவுக்கு ஏலம் எடுத்தார்.

# இந்தியாவுடனான போட்டி; இம்ரான் பர்கத் ஆடுவாரா?

(கொழும்பு)

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் இளம் ஆரம்ப ஆட்டக்காரர் இம்ரான் பர்கத், இலங்கை அணிக்கு எதிராக நடந்த போட்டிக்கு முன்பு கணுக்காலில் காயம் ஏற்பட்டது.

அவர் குணமடைய 4 முதல் 7 நாட்கள் வரை ஓய்வெடுக்க வேண்டியுள்ளது.

எனவே, பர்கத் இந்தியாவுக்கு எதிராக நாளை நடைபெறும் ஆட்டத்தில் ஆடுவது சந்தேகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.


இதுபற்றி 24 மணி நேரம் கழித்துத்தான் தெரியவரும் என்று பாகிஸ்தான் அணி முகாமையாளர் ஹாரூன் கான் தெரிவித்தார்.


## டேவன்போர்ட் வெற்றி


அமெரிக்காவில் 'சேஸ்' ஓபன் ரெனிஸ் போட்டி நடைபெற்றுவருகிறது.


இதன் மூன்றாவது சுற்றில் அமெரிக்க வீராங்கனை லிண்ட்சே டேவன்போர்ட் அமெய் பிரெசியரை எதிர்கொண்டார். இதில் டேவன்போர்ட் 6-2, 6-4 என்ற நேர்செட்டில் வெற்றி பெற்றார்.

# ஒலிம்பிக் போட்டிக்குத் தயாராகும் ஏதென்ஸ்









## இன்னும் 20 நாட்களில்



## புதிர்

மோகனுடைய மாமா ஒரு கட்டுக் கரும்பு கொண்டு வந்தார். மோகனும் அவனுடைய நண்பர்களும் சேர்ந்து ஐந்து நாட்களுள் அந்தக் கரும்புக்கட்டை ருசித்து உண்டு முடித்தார்கள்.

முதல்நாள் ஆசையாசையாக கரும்பை உண்ட அவர்களுக்கு, நாள் செல்லச் செல்ல சலிப்பு ஏற்பட்டது. முதல்நாள் உண்ட கரும்பைவிட, மறுநாள் பத்துக் கரும்புகள் குறைவாக உண்டார்கள். அதற்கு மறுநாள் அதைவிட பத்துக் கரும்புகள் குறைவாக உண்டார்கள். இவ்வாறு ஒவ்வொரு நாளும் குறைத்து உண்டு, ஐந்தாவது நாள் கரும்புக் கட்டு முழுவதும் உண்டு முடித்து விட்டார்கள்.


கரும்புக்கட்டில் இருந்த மொத்தக் கரும்புகளின் எண்ணிக்கை நூற்றி இருபத்தைந்து. அப்படியானால், ஒவ்வொரு நாளும் அவர்கள் உண்ட கரும்புகளின் எண்ணிக்கை என்ன?

### விடைகள்

முதல் நாள் உண்ட கரும்புகள் - 45
இரண்டாம் நாள் உண்ட கரும்புகள் - 35
மூன்றாம் நாள் உண்ட கரும்புகள் - 25
நான்காம் நாள் உண்ட கரும்புகள் - 15
ஐந்தாம் நாள் உண்ட கரும்புகள் - 05
மொத்தம் - 125

## மூளைக்கு வேலை

வட்டத்தில் விடுபட்ட எண் என்ன?





விடை அடுத்த வாரம்

## மூன்றாம் வரிசையில் விடை எண் என்ன வரும்?

(8) (4) - 20
(5) (5) - 15
(7) (6) - ?
(4) (3) - 5

விடை அடுத்த வாரம்

## சித்திரக்கதை
### குறும்பு




அந்தத் தொப்பியும் ஜஸ்கிறீம் வண்டியையும் திருடி யானைக் கண்டுபிடிக்க வேண்டும். நானே வியாபாரிபுடன் செல்லவேண்டும்.



மறுநாள் காலை ராமு தொப்பியுடன் சந்தைக்குப் புறப்பட்டது. ஜஸ்போவும் கூடச் சென்றது.



கதை, ஓவியம் - ந.மருள் தொடரும்...

## ஓவியப்போட்டி

சிறுவர்களே உங்கள் ஓவியங்களுக்குப் பரிசுதர எண்ணியுள்ளோம். உங்கள் கைவண்ணங்களை இன்னும் மெருகூட்ட வரைந்து அனுப்புங்கள். இந்த ஓவியப்போட்டியில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்டு 1-11 வரையான மாணவர்கள் இதில் பங்குபற்றலாம்.

நீங்கள் வரையும் ஓவியத்தில் நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், கலர் பென்சில் போன்றன பயன்படுத்தலாம்.

வெள்ளைத்தாளில் ஓவியத்தினை வரைந்து அனுப்பவும். அனுப்பும் ஓவியத்தின் தாளினை மடிக்காமல் அனுப்பவும். கட்டக் கத்தாளின் (A4) இல் அமையவேண்டும். நீங்கள் வரைந்த ஓவியங்களை கீழ்வரும் கூப்பனைப் பூர்த்திசெய்து, அதனுடன் இணைத்து அனுப்பிவையுங்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 3 இற்குப் பரிசுகள் வழங்கப்படும். அத்தோடு, 10 ஆறுதல் பரிசுகளும் உண்டு. நீங்கள் அனுப்பும் ஓவியங்களில் பரிசுக்குரிய ஓவியங்கள் - ஈழநாதேனிக்கள் கழகத்தினால் நடாத்தப்படும் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்படும்.

முழுப் பெயர் :........................
கற்கும் பாடசாலை :........................
கற்கும் தரம் :........................
வீட்டு முகவரி :........................

அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ........ திகதி ........ மாணவர் ஒப்பம் ........

ஓவியப்போட்டி
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## தெரிந்துகொள்ளுங்கள்

| | |
|---|---|
| 1.உலகத்தின் கூரை | - திபெத் |
| 2.நைல் நதியின் கொடை | - எகிப்து |
| 3.இருண்ட கண்டம் | - ஆபிரிக்கா |
| 4.இத்துமை நாடு | - நேபாளம் |
| 5.பெரிய ஜனநாயக நாடு | - இந்தியா |
| 6.இந்து சமுத்திரத்தின் முத்து | - இலங்கை |
| 7.ஐரோப்பாவின் நோயாளி | - துருக்கி |
| 8.ஏழு குன்று நகரம் | - ரோம் |

ச. மஞ்சுசி
தரம் - 7





# சிறுவர் அரங்கம்



**சிந்தனைக்கு!**
உள்ளத்தில் ஊக்கமும், துணிவும் இல்லாவிட்டால் வெற்றி பெற முடியாது

# குட்டி முயலார்

குட்டி முயலார் ஒரு நாள் காட்டுக்குப் போனார். ஒரு சாக்குப் பை நிறைய நல்ல இனிப்பான பழங்களைச் சேர்த்து எடுத்தார். முயலாரிடம் ஒரு காக்கையார் வந்தார். தனக்கும் இனிப்பான பழங்கள் சிலவற்றைச் சாப்பிடத் தருமாறு அவர் முயலாரைப் பார்த்துக் கேட்டார்.



காக்கையாரே, காக்கையாரே நன்றாகப் பழுத்த பழமாய்ப் பார்த்து நீரே தெரிவு செய்து எடுத்திடும் என்று குட்டிமுயலார் சொன்னார்.

இரக்க மனம் கொண்ட குட்டி முயலாரே! உமக்கு மிகவும் நன்றி என்று சொன்னார் காக்கையார்.

நன்றாகப் பழுத்த பழமாய்ப் பார்த்து இரண்டைத் தேர்ந்து எடுத்தார் காக்கையார்.

பசித்திருக்கும் எனது அருமைக் குஞ்சுகளுக்கு இந்தப் பழங்களைக் கொண்டு சென்று நான் கொடுத்திடுவேன் என்று சொன்னார் காக்கையார். கூட்டை நோக்கி வேகமாய்ப் பறந்து போனார் காக்கையார்.

வீட்டுக்குப் போகும் வழியிலே குட்டி முயலார் அணில் பிள்ளைகள் சிலரைச் சந்தித்தார். அணில் பிள்ளைகள் குட்டி முயலாரைப் பார்த்து- முயல் அண்ணா, முயல் அண்ணா உங்களிடம் இருக்கும் பழங்களில் சிலதை எமக்கும் சாப்பிடத் தருவாயா? என்று கேட்டார்கள்.



அணில் பிள்ளைகளே, அணில் பிள்ளைகளே இந்தாருங்கள். அமுதம் போல இனிக்கும் பழங்கள் இவற்றைச் சாப்பிடுங்கள் என்று கொடுத்து, உபசரித்தார் குட்டிமுயலார்.

வீட்டுக்குப் போகும் வழியிலே முயலார் ஒரு முள்ளம் பன்றியாரைச் சந்தித்தார். கவலையோடு வந்த முள்ளம் பன்றியாரைப் பார்த்த குட்டி முயலார் - முள்ளம் பன்றியாரே, முள்ளம் பன்றியாரே நடந்தது என்னவோ என்று கேட்டார்?

கவலை கொண்டு நீர் வாடக் காரணமும் யாதோ? என்று அக்கறையோடு கேட்டார்.

முள்ளம் பன்றியார், குட்டிமுயலாரைப் பார்த்து - குட்டி முயலாரே, குட்டி முயலாரே அதை ஏன் கேட்கிறீர்கள், பசியால் வாடி அழுதிடும் எனது அருமைக் குட்டிகளுக்கு இரை தேடி நான் வந்தேன்.

வெகு நேரம் காட்டிலே அலைந்போதும், இரை ஏதும் கிடைக்காது இப்போது வெறும் கையோடு வீடு திரும்பிச் செல்கின்றேன் என்று சொன்னார்.

முள்ளம் பன்றியார் சொன்னதைக் கேட்ட முயல் குட்டியார்- முள்ளம் பன்றியாரே, இனிமேல் உமக்குக் கவலையில்லை. அமுதம் போல இனித்திடும் நல்ல கனிகள் என்னிடம் உள்ளன. அவற்றை நீர் எடுத்துச் சென்று உமது அருமைக் குட்டிகளுக்குக் கொடுத்திடும் என்று சொன்னார்.

முயல் குட்டியாரின் அளவில்லாத அன்புக்கு நன்றி சொல்லிய முள்ளம் பன்றியார் - பழங்களை எடுத்துக் கொண்டு தனது அருமைக் குட்டிகளுக்குக் கொடுத்திட வீட்டுக்கு விரைந்து ஓடிச்சென்றார்.

பழங்கள் நிறைந்த சாக்குப் பையை எடுத்துக் கொண்டு வீடு திரும்பிய குட்டி முயலார், வழியிலே ஒரு கரடியாரைச் சந்தித்தார்.

மரத்தினடியில் கவலையோடு நின்றிருந்த கரடியாரைப் பார்த்துக் கரடி அண்ணா, கரடி அண்ணா கவலை மிகக் கொண்டு நீர் நிற்பதுவும் ஏனோ? என்று அன்பாகக் கேட்டார்.



பெரு மூச்சு விட்ட கரடியார், குட்டி முயலாரைப் பார்த்து - முயல் தம்பி, முயல் தம்பி அதை ஏன் கேட்கிறாய். என தருமை மனைவியாருக்கு இன்று பிறந்த நாள். அவருக்குப் பரிசாகக் கொடுத்திட என்னிடம் ஒன்றுமில்லையே. அதை நினைக்கும் போது தான் மிகவும் கவலையாயிருக்கிறது என்று சொன்னார்.

கரடியார் சொன்னதைக் கேட்ட குட்டி முயலார் - சிரித்துக் கொண்டே கரடி அண்ணா, கரடி அண்ணா கவலை கொள்ளாதீர். இனிப்பான பழுத்த பழங்கள் என்னிடம் உள்ளன அவற்றை எடுத்துச்சென்று, உமது அன்பு அம்மாவுக்கு பரிசாகக் கொடுத்திடும் என்று சொன்னார். சாக்குப் பையைத் திறந்து தேவையான அளவு பழங்களை எடுத்திடுமாறு கரடியாரைக் கேட்டுக்கொண்டார்.

குட்டி முயலாரின் அன்பைக் கண்ட கரடியார் - மனம் நெகிழ்ந்து போனார். மகிழ்ச்சியோடு குட்டி முயலாருக்கு நன்றி சொன்னார்.

பையிலிருந்த பழங்களில் சிலதைத் தெரிவு செய்து எடுத்தார். குட்டி முயலாருக்கு மீண்டும் ஒரு முறை நன்றி சொல்லிவிட்டு, வீட்டை நோக்கி ஓட்டமாய் ஓடிச் சென்றார்.

குட்டி முயலார் வரும் வழியில் வெள்ளாடார் ஒருவரையும், அவரது குட்டிகள் அறுவரையும் சந்தித்தார். தன்னிடமிருந்த பழங்களில் சிலதை எடுத்து ஆடாருக்கும், அவரது குட்டிகளுக்கும் சாப்பிடக் கொடுத்தார். குட்டி முயலாருக்கு நன்றி சொல்லிப் பழங்களை ஆடாரும், அவரது குட்டிகளும் சுவைத்துச் சாப்பிட்டார்கள்.

பொழுது சாய்ந்து வெகு நேரமாகியும் குட்டி முயலார் வீடு திரும்பி வராததால், கவலை மிகக் கொண்டிருந்தார் அம்மா முயலார். விளக்கு வெளிச்சத்திலே யன்னலருகே அமர்ந்து, அருமை மகனை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருந்தார் அம்மா முயலார். அண்ணனைப் பார்த்திருந்து களைத்துப் போன தம்பி முயலார்கள்- ஆழ்ந்து நித்திரை செய்திருந்தார்கள்.

காட்டிலே பலத்த மழை பெய்தது. மழையில் நனைந்து வீட்டை நோக்கி வேகமாக ஓட்டம் பிடித்தார் குட்டி முயலார். வீட்டிலேஅம்மா தேடிக் கொண்டிருப்பாரே என்று மிகவும் கவலைப்பட்டார் குட்டி முயலார்.

**யோ.சத்தியன்**

(தொடரும்...)

# ஆந்தை



ஆந்தைகளில் மிகவும் அதிகமாக காணப்படும் வகை பார்ன் ஆந்தைகள். இவை அனைத்துக் கண்டங்களிலும் (அந்தாட்டிக் காவைத் தவிர) பரவலாகக் காணப்படுகின்றன. இதைத் தவிர உலகின் ஒவ்வொரு இடத்திலும் அந்த இடத்துக்குரிய ஆந்தைகள் காணப்படும். இந்த இனத்தில் மொத்தம் 133 வகை ஆந்தைகள் உண்டு.

ஆந்தையின் கண்கள் - மற்றப் பறவைகளைப்போல பக்கவாட்டில் அமைந்திருக்காது. மனிதர்களுக்கு இருப்பதுபோல் நேர்த திசையைப் பார்க்கும் வண்ணம் அமைந்திருக்கும். இவற்றின் உடலைச் சுற்றியிருக்கும் இறக்கைகள் மென்மையானவை. அதனால்தான் இவை பறக்கும்போது சத்தம் வருவதில்லை. இவற்றின் முக்கிய உணவு எலி, சிறிய - விலங்குகள், பறவைகள், பல்லிகள், பூச்சிகள், மீன்கள் மற்றும் தவளைகள்.

இவை வாழும் இடங்கள், காடுகள், பாலை வனங்கள், புல்வெளிகள், வயல்வெளிகள் மற்றும் மரங்கள் நிறைந்த இடங்கள். ஆந்தைகள் இரவில் மட்டுமே வேட்டைக்குச் செல்லும். அதனால், இவற்றுக்கு காதுகள்தான் முதற் கண்கள். இரவானதும் இவை தாழ்வாகப் பறந்து செல்லும். அப்போது எலி போன்ற சின்னச் சின்ன மிருகங்கள் எழுப்பும் சத்தத்தைக் கொண்டு, அந்தத் திசையில் பறந்து சென்று அவற்றை இரையாக்கிக் கொள்ளும்.

ஒரு சிறிய சத்தம் கேட்டதும், ஆந்தைகள் தன் தலையை இரு புறங்களிலும் மாற்றி மாற்றித் திருப்பி, சத்தம் வரும் திசையைக் கண்டறிய ஆரம்பிக்கும். இரண்டு காதுகளிலும் ஒரே அளவு சத்தம் கேட்டால், ஆந்தை இரைக்குச் சரியாக நேர்கோட்டில் இருக்கிறதென்று அர்த்தம். உடனே பறந்து சென்று, இரையைத் துல்லியமாகப் பிடித்துவிடும். மற்றைய பறவைகளைப்போல் கால்களில் பிடிக்காமல் - ஆந்தை தன் அலகில்தான் இரையைக் கொண்டுசெல்லும். பெரிய இரைகளைக் கிழித்து, சிறிது சிறிதாக்கி உண்ணும் வழக்கம் உள்ளவை. அதுவே சிறிய இரையாக இருந்தால் அப்படியே முழுசாக விழுங்கிவிடும்.

ஆந்தைக் குஞ்சுகள் 15 இலிருந்து 35 நாட்களுக்குள் முட்டைகளிலிருந்து வெளியே வரும். முதலில் பிறக்கும் குஞ்சுகளுக்கு இருக்கும் மிகப்பெரிய நன்மை - இவற்றுக்கு உணவில் அதிக பங்கு கிடைக்கும் என்பதுதான். குஞ்சு பொரிக்கத் தயாராகும் ஆந்தைகள் ஒழுங்கான முறையில் கூடுகள் கட்டாது. பாறைகளின் வீளிம்பிலோ, மரங்களில் வெறும் உதிர்ந்த இலைகள், இறக்கைகளின் மேலேயே முட்டையிடும்.

# எனது ஊர்

எனது ஊரின் பெயர் உரும்பிராய். இது யாழ்ப்பாணத்திலிருந்து ஏழு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இந்த ஊரின் நடுவில் - கடைகளும், மத்திய சந்தையும், மத்திய மருந்தகமும், அஞ்சல் அலுவலகமும், வங்கிகளும் உள்ளன. இவற்றைச் சுற்றி மக்களின் வீடுகள் உள்ளன. இந்த வீடுகளுக்கு அப்பால் ஊரைச் சுற்றித் தோட்டங்கள் உள்ளன. இந்தத் தோட்டங்களில் மரக்கறிகளும், வாழை, திராட்சை போன்ற பழவகை மரங்களும் பயிரிடப்படுகின்றன.

எனது ஊரில் பல புகழ்பெற்ற கோயில்களும், கிறிஸ்தவ தேவாலயங்களும் உண்டு. எனவே, எனது ஊர் மிகவும் அழகான ஊராகத் திகழ்கிறது.

ஜெ.கபிரா- தரம் 4
சைவத் தமிழ் வித்தியாலயம்.

# பாவம் இந்தப் புழு வழி காட்டுங்களேன்



# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

5இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.
நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம் விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
:..............................

.................. ..............................
திகதி ஒப்பம்

.............................. ..............................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

இங்கே மடிக்கவும்



# அன்புள்ள சிறுவர்களே!

அன்புள்ள சிறுவர்களே!

நீங்கள் வருடம் முழுவதும் படித்திருக்கலாம். கஷ்டப்பட்டுப் படித்திருக்கலாம். விழுந்து விழுந்து படித்திருக்கலாம். ஆனால், ஒன்றைமட்டும் மறந்து விடாதீர்கள். உங்களுடைய விடைத்தாள்களைத் திருத்தும் ஆசிரியருக்கு இதெல்லாம் முக்கியமில்லை. அவருக்கு நீங்கள் சரியான விடையை எழுதியிருக்கிறீர்களா, தெளிவாக, சாதுர்யமாக, முழுமையாக விடைகளை எழுதியிருக்கிறீர்களா என்பதே முக்கியம். இதனை அவசியம் மனதில் பதித்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் நிறைய விடயங்களைப் பற்றி அறிந்து கொண்டிருப்பீர்கள். விளங்கி இருக்கும். அதுவே உங்கள் வெற்றிக்கு முதற்படி. தளராமல், விடாமுயற்சியுடனும், நம்பிக்கையுடனும் படியுங்கள். நான் அடுத்த பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெறுவேன் என்று நினைத்துப் படியுங்கள். படித்த பின் கிடைக்கும் ஓய்வுநேரங்களில் இசையை ரசிப்பது, கதைப்புத்தகம், சஞ்சிகைகள் வாசிப்பது, ஓவியம் வரைவது, எழுதுவது என்று - நேரத்தைப் பயன்படுத்துங்கள்.

நன்றாகப் படியுங்கள்.
நன்றாக மனதிற் பதியுங்கள் .
நன்றாக எழுதுங்கள்.

பரீட்சை முடிவுகள் வந்ததும் இதனை உணருவீர்கள். அடுத்த முறை அனைவரும் நல்ல புள்ளிகள் எடுக்க என்னுடைய வாழ்த்துக்கள்.

பாசமுடன் - சாரு அக்கா

# விடுகதைகள்

1. ஊரெல்லாம் சுத்துவான். வீட்டுக்குள் வரமாட்டான். அவன் யார்? வீட்டுக்குள்ளேயே சுத்துவான். வெளியே வரமாட்டான். இவன் யார்?
2. சத்தம் போட்டு ஊரைக் கூட்டுவான் அவர் யார்? சத்தம் போடாமலே ஊரைக் கூட்டுவான். இவர் யார்?
3. ஊசி போட்டு நோயைக் குணமாக்குவார். இவர் யார்? ஊசி போட்டு நோயை வரவழைப்பார். அவர் யார்?
4. கண்ணிருந்தும் பார்க்க முடியாது. அவன் யார்? கண்ணில்லாமலேயே பார்த்துக்கொண்டிருக்கிறான். இவன் யார்?
5. செய்ததைச் செய்யும் குரங்கும் அல்ல. சிங்காரிக்க உதவும் சீப்பும் அல்ல. அது என்ன?

- விடைகள் அடுத்தவாரம்

# கூடி விளையாடு

கே.வி.குணசேகரம்

சென்றவாரத் தொடர்ச்சி...




அவற்றுக்குப் பசித்தது.
முற்றத்தில் இறங்கி நின்றன.
கதிர் குருவியைப் பிடிக்க
நினைத்தது.
பதுங்கிப் பதுங்கி வந்தது.
இதை வீமன் கண்டது.
'குருவிகளைப் பிடிப்பது பாவம்'
'குருவிகள் தான் எனது உணவு'
'இது அருணனின் குருவிகள்.
பிடித்தால் கவலைப்படுவான்
பிடியாதே'
'நான் கட்டாயம் பிடிப்பன்'
'பிடிக்க நான் விடமாட்டன்'
என்ன செய்வாய்?
'பிடி பார்ப்பம்'
கதிர் குருவிகளைப் பிடிக்கப்
பதுங்கியது.
வீமன் அங்குமிங்கும் ஓடிக் குருவிகளைக் கலைத்தது.
அப்பொழுது அருணன் பாடசாலையால் வந்தான்.
அவனுக்குக் கோபம் வந்தது.
வீமனைத் தடியால் மெல்ல அடித்தான்.
கதிர் சிரித்தது.
'எப்படி என்னைப் பிடிக்க விடாததற்குத்
தண்டனை'
'சத்தியம் வெல்லும்.
உண்மைக்குத் தோல்வியில்லை.
உனது வஞ்சகச் செயல் ஒரு நாள்
தெரியவரும்'
'ஒரு நாளும் வராது, நீ தான்
அடிவாங்குவாய்'




'அருணன் குருவிகளுக்குத் தீனி
போட்டான்.
குருவிகள் இறங்கி வரவில்லை.
அதனால் அருணனுக்கு கோபம் வந்தது.
வீமனைப் பிடித்துக் கட்டினான்.
'இனிமேல் உன்னைக் கட்டி வைத்தல்
வேண்டும்.
'இரவு தான் அவிழ்த்து விடுவேன்'
கதிர் சிரித்தது.

(தொடரும்...)

# உங்கள் கைவண்ணம்




ப.கார்த்திகன்
தரம் - 8
வைத்தீஸ்வராக் கல்லூரி



த.நிருபன் - தரம் 10
யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்
கரவெட்டி.

# விநோதத் தகவல்

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஜோன் எஃப் கென்னடி - பெர்லின் நகருக்குச் சென்றிருந்தார். அங்குள்ள மக்களிடம் 'நானும் இந்த நகரத்தைச் சேர்ந்தவன் என்று நினைத்துக் கொள்ளும்படி பேச நினைத்தார்'. அதற்காக அவர் அவர்களுடைய மொழியில் ஒரு வார்த்தையைக் கற்றுக் கொண்டார். ஆனால், பெர்லின் பேச்சு வழக்கில் அதற்கு 'ஜாம் தடவிய ரொட்டி' என்று அர்த்தம். தவறான மொழிபெயர்ப்பால் மக்கள் சிரிக்க... ஜனாதிபதி பாதியிலேயே பேச்சை நிறுத்தும்படியானது.

# தமிழர்களுக்கான உரிமைகளை வழங்க இனவாத அரசு இன்னும் தயாராகவில்லை

## எழுச்சிப் பேரவை கூட்டத்தில் சிவமகாராசா

அரசு இன்று இராணுவ நிலைகளிலே படைகளைக் குவிக்கின்றது. இராணுவக் காப்பரண்களை பலப்படுத்துகிறது. இது எதனைக் காட்டுகிறது. சிங்களதேசம் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வழங்கத் தயாராகவில்லையென்பதையே காட்டுகிறது என தெல்லிப்பளை ப.நோ.கூ. சங்க தலைவர் சி.சிவமகாராசா தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற தெல்லிப்பளைப் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை சங்கம நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

ஜே.வி.பியினர் தம்மை சோசலிஸ சமதர்ம இயக்கம் என கூறி வருகின்றனர். ஆனால், இன்று இனவாதக் கூச்சலிட்டு கொண்டிருக்கின்றனர். இன்றைய அரசும் இனவாதக்கூட்டுக்குள் மாட்டுப்பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.


நாடாளுமன்றம் இன்று ஒழுங்காக நடைபெறவில்லை. அது ஒழுங்காக நடைபெற்றால்தான் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பிரதேசங்களின் தேவைகளை நிறைவேற்ற முடியும். கடந்த காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதியில் இருந்து பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பின்னர் ஏற்பட்ட போர் இதற்கு இடையூறாக அமைந்தது.

நாம் அனைவரும் ஒற்றுமையாக இருந்தால்தான் எமது பிரதிநிதிகளுடைய பலத்தைக்காட்ட முடியும். இன்று நம்மத்தியிலே எமது குறிக்கோளுக்குப் புறம்பானவர்கள் பலருள்ளதை நீங்கள் அறிவீர்கள்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய வைத்திய கலாநிதி ருக்மணி கருத்து வெளியிடுகையில் -எமது நாட்டிலே நடைபெற்ற இருபது வருடப்போர் பல பின்னடைவுகளை எமக்கு ஏற்படுத்தியுள்ளது. எமது பகுதிகளிலே கலாசார சீரழிவுகள் அதிகரித்துள்ளன. இதிலே சம்பந்தப்பட்டுள்ள இளைஞர், யுவதிகளுள் பெரும்பாலானவர்கள் இருபது வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணம் எப்படியிருந்தது என்பதை அறியாதுள்ளார்கள்.

ஏனெனில், இந்தப் போரின் மூலமாக நாம் பல பெரியவர்களை இடப்பெயர்வுகள், உயிரிழப்புக்கள் மூலமாக தொலைத்துவிட்டோம். இன்று இளைஞர்களுக்குப் புத்திமதி சொல்லக்கூடிய பெரியவர்கள் குறைவு. யாழ்ப்பாணத்தின் முன்னைய நிலையை இளைஞர்களுக்கு எடுத்துச்சொல்லி அவர்களைத் திருத்தமுடியும் எனத்தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தெல்லிப்பளை பிரதேச தேசிய எழுச்சிப்பேரவைக் குட்பட்ட ஊரகப் பேரவைச் செயலாளர்கள், உறுப்பினர்கள், வலிகாமம் வடக்கு தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் வ.சாம்பசிவம் உட்படப் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இடமாற்றமாகிச்சென்ற யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி க்கு, வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை தலைமையகம் வழங்கிய பிரியாவிடை நிகழ்வின்போது, உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ் பிரதேச சபை இலட்சனை பொறிக்கப்பட்ட விருதினை வழங்கி கௌரவிப்பதை காணலாம். (100)

## நெய்தல் விழா பிற்போடல்

(குருநகர்)

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியால் இந்த மாதம் பிற்பகுதியில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்திருந்த 'நெய்தல் விழா 2004' புனித பாக்கல் திருநாள் மற்றும் ஆவணி 15ஆம் மடுமாதா திருநாட்கள் காரணமாகப் பிற்போடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஓகஸ்ட் மாதப்பிற்பகுதியில் 'நெய்தல் விழா 2004' ஒட்டிய போட்டிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு, விழா ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுமென்று ஐக்கிய முன்னணிச் செயலாளர் ம.குயின்ரன் தெரிவித்தார். (206)

## அரியாலைப் பகுதியில் சில வீதிகள் நீண்டகாலமாக திருத்தப்படவில்லை

அரியாலை கனகரட்ணம் சந்திக்கருகில் உள்ள இருவீதிகள் கடந்த 25 வருடங்களாகத் திருத்தப்படாத நிலையில் இருப்பதால் பொதுமக்கள் போக்குவரத்துக்குப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அந்தப் பகுதியில் உள்ள மலர் மகள் வீதி, சாஸ்திரியார் வீதி ஆகிய இரண்டுமே நீண்ட காலமாகத் திருத்தப்படாமல் உள்ளன.

இந்த வீதியில் மழைக்காலத்தில் பெரும் சேறும், சகதியும் ஏற்படுவதால் இந்த வீதியைப் பயன்படுத்த முடியாமல் இருப்பதுடன் இரவு வேளைகளில் பயணிப்பதிலும்பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

இது குறித்துப் பல தரப்பினருக்கும் அறிவித்துள்ளபோதும இது வரையில் எவரும் இதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என அந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் தெரிவிக்கின்றனர். (ப)

## தேவாலய திருநாளை முன்னிட்டு குருநகரில் சிரமதானப் பணி

(கொக்குவில்)

குருநகர் சென்.ஜேம்ஸ் தேவாலய திருநாளையொட்டி குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி பெருமெடுப்பில் சிரமதானம் ஒன்றை நடத்தியிருக்கிறது. வீதிகள், வடிகால்கள் குப்பை கூழங்கள், புல் பூண்டுகளை துப்பரவு செய்யும் இந்தப்பணியில் குருநகர் பகுதியைச் சேர்ந்த சனசமூக நிலையங்களும் பங்கெடுத்துக்கொண்டன.

இதேவேளை, நாளை திருநாளை கொண்டாடுமுகமாக இளைஞர்கள் சந்திகளில்கூடி பாட்டுக்கள் போட்டு ஆடுவதை ஐக்கிய முன்னணி தடை செய்துள்ளது. (206)

## கல்வியங்காடு சந்தையில் பெரும் சுகாதார சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காட்டுச் சந்தையில் பெரும் சுகாதாரச் சீர்கேடு நிலவி வருகின்றது. சந்தைப்பகுதியில் வியாபாரத்திலீடுபடுவோரின் அசட்டையீனமான செயற்பாடுகளே இதற்குக் காரணமெனத் தெரிய வருகிறது.

பழங்களை விற்பனை செய்வோர் அவற்றின் தோல்களை ஆங்காங்கே எறிவதால் பெருந்தொகையான இலையான்கள் பெருகி, சந்தையில் பெரும் சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்தி வருகின்றன.

பலாப்பழம், மாம்பழம் போன்றவற்றின் தோல்களே இவ்வாறு எறியப்பட்டு சந்தையின் பல பகுதிகளில் கிடக்கின்றன. செவ்விளநீர் கோம்பைகளும் எறியப்பட்டு கிடக்கின்றன. அத்தோடு, அங்குள்ள கழிவுநீர் கான்களுக்குள்ளும் சிலர் குப்பைகளைக் கொட்டியிருப்பதால் கழிவு நீர்தேங்கி இருப்பதனையும் காணமுடிகின்றது.

மீன் சந்தைப்பகுதியிலும் நாய்கள், பூனைகள் போன்றவை பொதுமக்களுக்குச் சிரமங்கொடுத்து வருவதுடன் அங்கும் இலையான்கள் பெருகிக் காணப்படுகின்றன. (ப)

## மானிப்பாய் மருதடி விவசாயக்குளம் அனுமதியின்றி மூடப்படுவதற்கு ஆட்சேபம்

### நீர் ஓடுவது தடைப்பட்டதால் நோய் பரவும் அபாயம்

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட மருதடி விவசாயக்குளம் ஆலயப் பகுதியினரால் அனுமதியின்றி மூடப்படுவதாகவும், சுதுமலை, மானிப்பாய் பகுதி ஊடாக கழிவுநீர், மழைநீர் வழிந்துபோக முடியாது தடைப்பட்டு, நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் மானிப்பாய் பிரதேச சபையின் செயலாளர் பி.விக்டர் உடுவில் கமநல சேவைகள் பெரும்பாக அலுவலர் ஊடாக வலி. தென்மேற்கு பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளார்.

இந்த விவசாயக்குளம் ஆலயப்பகுதியினரால் மூடப்படுவதற்கு முதல், அதற்கு ஈடாக பிறிதொரு விவசாயக்குளம் அமைத்துக்கொடுத்து, அதில் இருந்துவரும் மேலதிக மண்ணைக் கொண்டே அந்த விவசாயக்குளம் மூடப்படும் என ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதை செயலாளரால சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே, இதற்குத் தாங்கள் ஏற்ற ஒழுங்கு செய்து, எமது பிரதேசத்திலுள்ள கழிவுநீர், மழைநீர் வழிந்தோட நடவடிக்கை எடுக்குமாறு செயலாளரினால் கேட்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தின் பிரதிகளை யாழ்ப்பாணம் கமநலத் திணைக்கள உதவி ஆணையாளருக்கும், மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தின் தலைவருக்கும், மானிப்பாய் மருதடி விநாயகர் தர்மகர்த்தா சபையின் தலைவருக்கும் மற்றும் விவசாயிகள் பிரதிநிதி எஸ். லீலாகிருஷ்ணனுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (100)

## பாடசாலை மாணவர்களிடையே திருக்குறள் மனனப்போட்டி

யாழ்ப்பாணப் பாடசாலைகளில் நடாத்தப்படும் மாபெரும் திருக்குறள் மனனப்போட்டி பாரிய அளவில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திருக்குறளின் மூலம் மொழியறிவுத் தேவைகளை ஈடுசெய்யும் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதற்கும், மனனம் செய்து, உள்ளத்தில் விசேட திறன்களை ஈட்டிக்கொள்வதற்கும், மாணவர்கள் திருக்குறள் நூலிலுள்ள 1330 ஈரடிக் குறட்பாக்களில் அதிகூடிய எண்ணிக்கையான குறள்களை மனனம் செய்துவரிசைக் கிரமம் தப்பாது ஒப்புவிக்கவேண்டும்.

பாடசாலை மட்டத்தில் இந்த மனனப் போட்டி மூன்று பிரிவாக நடத்தப்படவுள்ளது. கீழ்ப்பிரிவில் 4ஆம், 5ஆம் தரங்களில் பயிலும் மாணவர்களும், மத்திய பிரிவில் 6ஆம், 7ஆம், 8ஆம், 9ஆம் வகுப்பு மாணவர்களும், மேற்பிரிவில் 10ஆம், 11ஆம், 12ஆம், 13ஆம் வகுப்புக்களில் கற்கும் மாணவர்களும் பங்குபற்றமுடியும்.

கீழ்ப்பிரிவினர் கடவுள் வாழ்த்து முதல் புகழ் என்ற அதிகாரம் வரையிலான 240 பாடல்களும், மத்திய பிரிவினர் இல்லறவியல், துறவியல் அடங்கிய 38 அதிகாரங்களும், மேற்பிரிவினர் அறத்துப்பால் முழுவதுடன் பொருட்பாலில் அரசியல், அமைச்சியல் அரணியியல், படையியல், உள்ளிட்ட 78 அதிகாரங்கள் மட்டுமே பாடமாக்கி ஒப்புவிக்க வேண்டிய குறள்களின் எண்ணிக்கைகள் ஆகும். எந்தப் பிரிவை சேர்ந்தவராயினும் 1330 குறள்களில் அதிகூடிய குறள்களை மனப்பாடம் செய்து ஒப்புவிக்கின்றார்களோ அவர்களுக்கு விசேட பரிசிலும் ரூபா 5000வும் வழங்கப்படும்.


ஒவ்வொரு பிரிவிலும் 1ஆம் இடம் பெறுபவர்களுக்கு ரூபா 3000, 2ஆம் இடம் பெறுபவர்களுக்கு ரூபா 2000, 3ஆம் இடம் பெறுபவர்களுக்கு ரூபா 1000 பங்கு பற்றுவோருக்குத் தகைமைச் சான்றிதழும் வழங்கப்படும். போட்டிக்கான விண்ணப்பங்களை அதிபர்கள் உறுதிப்படுத்தி, திருக்குறள் மனனப் போட்டி அமைப்பாளர் யாழ். கல்வி வலயம் யாழ்ப்பாணம் என்ற முகவரி இட்டு ஆவணி மாதம் 30ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவேண்டுமென யாழ். வலயக் கல்வி பணிப்பாளர் தெரிவித்தார்.

திருக்குறள் மனனப் போட்டி ஐப்பசி மாதம் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.



*சாவகச்சேரி மக்கள் வங்கியில் 43ஆவது ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடபகுதி பிராந்திய முகாமையாளர் சிவபாதவிருதயரை வங்கிக்கு அழைத்துவரப்பட்டபோது, எடுக்கப்பட்ட படம்.*


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



பத்தாவது அகவையில்




பெயர் : சி. சுகந்தன்
முகவரி : நவணம் தோட்டம், அல்வாய் தெற்கு.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

வாரநோக்கு.... - யாழவன்



# இலங்கையில் சமாதானம் ஏற்படுவதில் சர்வதேசம் கொண்டுள்ள அக்கறை

இலங்கையின் சமாதான முயற்சிகளிலே இந்தியாவை உள்நுழைப்பதற்கு ஆரம்பம் முதலே பல தலையீடுகள் பிரயோகிக்கப்பட்டு வந்தாலும் அவற்றில் அதிக அக்கறை எடுக்காத இந்தியா தற்போது தானாகவே சமாதான முயற்சிகளுக்குள் தலைப் போட எத்தனித்து வருவதாக அறிய முடிகின்றது.

இந்தியாவின் இந்த திடீர் மாற்றத்துக்கு காரணம் இலங்கையின் இனப்பிரச்சினை தீர்விலே இந்தியா கொண்டுள்ள அதீத அக்கறையின் வெளிப்பாடு என்று சொல்லிவிட முடியாது. இந்து சமுத்திரப் பிராந்தியத்திலே தனது வல்லாண்மை குறைநது விடுமோ என இந்தியாவை தொற்றியுள்ள அண்மைக்கால ஏக்கத்தின் வெளிப்பாடே இந்த மாற்றத்துக்கான காரணமாகும்.

இலங்கையின் சமாதான நகர்வுகளை காரணமாக வைத்து அமெரிக்காவும், பாகிஸ்தானும் இலங்கை அரசுடன் பேணிவரும் நட்புரிமை இந்தியாவின் வயிற்றிலே புளியை கரைத்துள்ளது. இந்து சமுத்திரப் பிராந்திய வல்லரசாக மாறத் துடிக்கும் இந்தியாவுக்கும், இலங்கையை தனது கைக்குள் வைத்து திருகோணமலைத் துறைமுகத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதன் மூலம் தனது, ஆதிக்கத்தை ஆசிய கடற் பிராந்தியத்திலே விஸ்தரிப்பதை நோக்கமாகக் கொண்ட அமெரிக்காவுக்கும் இந்தியாவுடன் பகையை வளர்த்துள்ள பாகிஸ்தானுக்கும் இடையிலான மும்முனை பனிப்போரின் மையமாக இலங்கையின் சமாதான நகர்வுகள் மாறியிருக்கின்றன.

இந்து சமுத்திரப் பிராந்திய ஆதிக்கம் தொடர்பாக இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே ஏற்கனவே பல போட்டிகள் நடைபெற்றுள்ளன. திருகோணமலை இயற்கைத் துறைமுகத்திலே கண்வைத்துள்ள இந்தியாவும் அமெரிக்காவும் அதனை இலங்கையிடமிருந்து குத்தகைக்கு பெற திட்டமிடுகின்றன. இந்தியா ஏற்கனவே திருகோணமலையிலுள்ள எண்ணை குதங்களை இலங்கையிடமிருந்து குத்தகைக்கு பெற்றுள்ளது.

அண்மையிலே இந்து சமுத்திரப் பிராந்தியத்துக்கு பொறுப்பான அமெரிக்க போர் கப்பலொன்று கொழும்பு துறைமுகத்துக்கு வந்து திரும்பியிருநதது. அதனையடுத்து இந்தியாவினுடைய கப்பலொன்றும் கொழும்பு துறைமுகத்துக்கு வந்து சென்றுள்ளது. இவ்வாறு அமெரிக்காவுடன் மல்லுக் கட்டிவரும் இந்தியா இப்போது தனது பலப் பரீட்சையை பரிசீலிக்கும் தளமாக இலங்கையின் சமாதான முயற்சிகளை பாவிப்பதற்கு முயல்கிறது.

இந்திய அமெரிக்க பலப் பரீட்சையிலே, அப்பாவியான இலங்கையின் சமாதானத்தை விழுங்கி ஏப்பம் விடாமல் இருந்தால் மட்டும் போதுமானது. ஏனெனில், அமெரிக்கா சமாதானத்தை வலுப்படுத்துவதாக கூறிக் கொண்டு இலங்கை அரசுக்கு வேண்டிய இராணுவ உதவிகளை வழங்கி வருகிறது. அண்மையிலும் இலங்கை கடற்படைக்கு போர்க் கப்பலொனறை அன்பளிப்பாக வழங்கியிருந்தது. அத்துடன் சில நவீன ரக ஆயுத தளபாடங்களையும் இலங்கைக்கு அமெரிக்கா வழங்கியுள்ளது.

**சூழ்நிலை கைதியாக்கப்பட்டுள்ள இலங்கையின் சமாதானப் புறா பல கைகளினூடாகவும் படாத பாடுபட்டு வருகிறது. உலக விவகாரங்களிலே சர்வதேசப் பொலிஸ்காரனாக தன்னை காட்டிக்கொள்ளமுயலும் அமெரிக்கா ஈராக்கைப் போல இலங்கையையும் அணுக முயல்கிறது.**

இந்தியாவும் தனது பங்குக்கு இலங்கை-இந்தியா பாதுகாப்பு ஒப்பந்தம் எனும் போர்வையின் கீழ் இலங்கைக்கு வேண்டிய இராணுவ தளபாட உதவிகளை வழங்கவுள்ளது. பாகிஸ்தான் அரசும் இரகசியமான சில ஒப்பந்தங்களின் பிரகாரம் ஆயுத தளபாட உதவிகளையும், அவற்றை கொள்வனவு செய்வதற்காக கடனடிப்படையிலும் அன்பளிப்பாகவும் பணத்தையும் வழங்கி வருகின்றது. இவை தான் இலங்கையின் சமாதான முயற்சிகளை வலுப்படுத்தும் இந்த நாடுகளின் இலட்சணம்.

சூழ்நிலை கைதியாக்கப்பட்டுள்ள இலங்கையின் சமாதானப் புறா பல கைகளினூடாகவும் படாத பாடுபட்டு வருகிறது. உலக விவகாரங்களிலே சர்வதேசப் பொலிஸ் காரனாக தன்னை காட்டிக் கொள்ள முயலும் அமெரிக்கா ஈராக்கைப் போல இலங்கையையும் அணுக முயல்கிறது.

ஈராக் விவகாரத்திலேயே மூக்குடைபட்டு இன்று உலகம் முன் குற்றவாளியாக நிற்கும் அமெரிக்கா இலங்கை விவகாரத்தில் அதிக அவசரப்பட்டு முடிவுகளை எடுக்காதென எதிர்பார்க்க முடியும். உலக நாடுகளில் தேர்தல் ஆண்டாக மாறியுள்ள இந்த ஆண்டு அமெரிக்காவிலும் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவுள்ளது. அமெரிக்காவில் விளையப் போகும் ஆட்சி மாற்றம் இலங்கையின் நிலைப்பாட்டிலும் மாற்றங்களை கொண்டுவரலாம்.

எது எவ்வாறு நடந்தாலும் அமெரிக்கா தனது புலனாய்வு போரை வறிய நாடுகளிலே என்றுமே கைவிட்டு போவதில்லை. கடந்த வாரம் கூட அமெரிக்கா புலனாய்வு அதிகாரிகள் குழுவொன்று யாழ்ப்பாணம் வந்து சென்றுள்ளது. வடபகுதி பாதுகாப்பு நிலவரங்களை பார்வையிட்ட இக்குழு அது தொடர்பாக இலங்கை அரசுக்கு தனது பாதுகாப்பு ஆலோசனைகளையும் வழங்கியுள்ளது. இதன் பிரகாரம் பல புதிய மாற்றங்கள் யுத்த முனைகளிலே கொண்டு வரப்படவுள்ளன.

இந்தியாவினுடைய புலனாய்வுப் பிரிவான றோவினுடைய அதிகாரிகள் குழுவும் இரகசியமான முறையிலே அடிக்கடி இலங்கைக்கு வந்து போகின்றனர். அதைவிட புடவை விற்பவர்களையும், சாத்திரம் செய்பவர்களாகவும் சில புலனாய்வு துறை அதிகாரிகளும் இலங்கைக்குள் ஊடுருவியுள்ளன என கருதப்படுகிறது.

இவ்வாறு பல முனைகளினாலும் இலங்கை மீதான தமது கரிசனையை இந்தியாவும் அமெரிக்காவும் செயற்படுத்தி வருகின்றன. இவ்விரு நாடுகளுக்கும் இடையே கொள்கை அளவிலே ஒரு ஒற்றுமை இருக்கிறது. இரண்டுமே இலங்கையின் சமாதான முயற்சிகளின் முக்கிய பங்கு தாரர்களான விடுதலைப் புலிகளுடன் முரண்பாடான நிலையையே கடைப்பிடித்து வருகின்றன.

ஆரம்பம் முதலே அமெரிக்கா தனது இராஜங்க செயலர் ரிச்சட் ஆர்மிரேஜ் மூலமாக விடுதலைப் புலிகளுக்கு பல எச்சரிக்கை கலந்த அறிவிப்புக்களை விடுத்து வந்துள்ளது. மேலும் தனது நாட்டிலே விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான தடையை மேலும் நீடித்துள்ள அமெரிக்கா அத்தடை நீக்கப்படுவதற்கு பல நிபந்தனைகளையும் போட்டுள்ளது.

சமாதானத் தேரை இழுத்துச் செலலும் ஒரு அமைப்பினரான விடுதலைப் புலிகளுக்கு உரிய இடத்தை வழங்குவதற்கு அமெரிக்கா தவறியுள்ளது. அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் நடைபெற்ற இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு விட அமெரிக்கா மறுத்துவிட்டது.

அமெரிக்காவை பொறுத்தவரையிலே அது கடைப்பிடித்து வரும் புலி எதிர்ப்பு போக்கானது விசித்திரமானது. விடுதலைப்புலிகளால் தனது நாட்டுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாத போதும் அமெரிக்கா புலிகள் இயக்கம் மீது தடைவித்துள்ளது. இலங்கையின் வெளி விவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் பொய்ப் பிரசாரத்தில் எடுபட்டே அமெரிக்கா உள்ளிட்ட சில உலக நாடுகள் புலிகள் மீது தடைவிதித்திருந்தன.


இந்தியாவைப் பொறுத்தவரையிலே பிரதமர் ராஜிவ் காந்தியின் கொலைக்கும், விடுதலைப் புலிகளுக்கும் சம்பந்தம் இருப்பதாக கூறி புலிகள் இயக்கத்தை தடை செய்துள்ளது. தொடர்ந்தும், ஆட்சி மாறினாலும் புலிகள் மீதான காழ்ப்புணர்ச்சியை மாற்றாது இந்தியா பேணி வருகிறது.

இவ்வாறு விடுதலைப் பலிகள் மது எதிர்ப்புணர்வையே பிரதிபலித்து வரும் நாடுகளை சமாதானப் பணிக்கு அனுசரணைக்கு அழைக்கும் உபாயம் எவ்வளவு வெற்றியளிக்குமோ தெரியாது. "பயங்கரவாதத்துக்கு எதிரான போர்" என ஏழை நாடுகளின் இயற்கை வளங்களை இலக்கு வைத்து தனது முதலாளித்துவ போரை நடாத்தி வரும் அமெரிக்கா இலங்கை விடயத்திலும் இப்போது அதிகமாக நெருங்கிச் செயற்படுகிறது. இதனை அவதானித்து வரும் சாதாரண தமிழ மக்கள் மீண்டும் போர் வந்தால் அமெரிக்கப் படையும் வருமென அஞசத் தொடங்கி விட்டனர்.

ஆனால், இந்தியப் படை வராது என அவர்கள் நிச்சயமாக அறிவார்கள். புலிகள் நூறிலும் குறைந்த அங்கத்தவர்களைக் கொண்ட ஆயுத வளம் அற்ற, பணபலம், அரசியற் பலம் குறைந்த வேளையிலேயே போரிட்டு அவர்களை வெல்ல முடியாத இந்தியப் படைகள் இனி வெல்வார்கள் என்பதை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்த விடயம் இந்திய உயரதிகாரிகளுக்கும் நன்கு தெரிந்தமையினாலேயே அவர்கள் இந்திய படைகள் இலங்கைக்கு அனுப்புவது தொடர்பாக பரிசீலிக்கப்படமாட்டாது எனத் தெரிவித்து வருகின்றன.

தற்போதைய இந்திய அரசிலே பதவிகளை வகிக்கும் அதிகாரிகள், அமைச்சர்கள் முன்னர் ராஜிவ் காந்தி காலத்திலும் அரசில் அங்கம் வகித்தவர்கள். அதிலும், தற்போது பாதுகாப்புத்துறை ஆலோசகராக கடமையாற்றும் கே.என்.டிக்கிற் அப்போது இலங்கைக்கான இந்தியத் தூதுவராக பணியாற்றி வந்தார். அவருக்கு இலங்கை விடயம் தொடர்பாக நிறையவே அனுபவங்கள் உண்டு. அதனாலேயே மிகவும் அவதானமாக தற்போது கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்.

அண்மையில் ஒரு கருத்தை அவர் முன்வைத்திருந்தார். இலங்கை அரசு அரசியல் ரீதியாக பலம் பெற்ற பின்னரே விடுதலைப்புலிகளுடன் பேச வேண்டும் என்பதே அதுவாகும். இதன் மூலமாக இலங்கை அரசு அரசியல் ரீதியாக பலமற்றிருப்பதை அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அவரது கருத்து வெளியிடப்பட்டு நீண்ட நாட்களாகியும் இலங்கை அரசு தனது அரசியல் பலத்தை நிரூபிக்கவில்லை.





கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் நாடாளுமன்றம் கூடிய போதும் தற்போதைய அரசு தனது பெரும்பான்மை பலத்தை நிரூபிக்கவில்லை. மாறாக தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களை கொட்டித் தீர்க்கும் இடமாகவே நாடாளுமன்றை மாற்றியுள்ளனர். ஜே.வி.பி. யினரும் சிஹல உறுமயவினரும் தமது இனவாதக் கூச்சலை தொடர்ந்து போட்ட வண்ணமேயுள்ளனர்.

கடந்த நாடாளுமன்ற அமர்வின் போது தமிழ் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் வெளியிட்ட கருத்தொன்று சபையிலே பெரும் அமளி துமளியை ஏற்படுத்தியுள்ளது. அதாவது மீண்டும் ஓர் போர் ஏற்படுமாகவிருந்தால் வட பகுதியிலுள்ள சிங்களப் படைகள் சடலங்களாகவே அனுப்பப்படுவர் என்பதேயதுவாகும்.

இந்தக் கருத்து நாடாளுமன்றுக்கு அநாகரிகமான சொற்பிரயோகமாக தெரிந்தாலும் யதார்த்தம் அதுவேயாகும். நடந்து முடிந்த பல போர்களும் இதனையே கூறியுள்ளன. அத்துடன் இலங்கை தற்போது நெருக்கப்பட்டுவரும் அமெரிக்காவினதும் இந்தியாவினதும் தப்பான எண்ணக் கரங்களுக்குள் அகப்பட்டு கொண்டால் மீண்டும் போர் ஏற்படுவது தவிர்க்கப்பட முடியாததாகி விடும்.

கஜேந்திரனின் உரையை காரணமாக வைத்துத் தாம் அரசு பக்கம் சாயப் போவதாக ஹெல உறுமயவினர் மிரட்டி வருகின்றனர். இந்த மிரட்டல்கள் ஒன்றும் புதியவையல்ல. அத்தனையும், தமிழர்களுக்கு பழகிப் போனவையே அமெரிக்காவையும், இந்தியாவையும் வைத்து அரசும் புலிகளை மிரட்டப் பார்க்கிறது. அதற்கு மசியாத புலிகள் போர் வந்தால் அதனை எதிர்கொள்ளத் தயாரெனவும் சூளுரைக்கின்றனர். எனவே, மிரட்டல்கள் பழையவைதான். ஆனால், அதன் வழி பிறக்கப்போகும் முடிவுகள் தான் புதியவையாக இருக்கலாம். போர் வருமா? இல்லை சமாதானம் தொடருமா? என அங்கலாய்க்கும் மக்களின் கேள்விகளுக்கெல்லாம் விரைவில் விடைகிடைக்குமா? என்பது அரசின் நிலைப்பாட்டிலேயே தங்கியுள்ளது. ❄❄

**மிரட்டல்கள் ஒன்றும் புதியவை யல்ல. அத்தனையும் தமிழர்களுக்கு பழகிப் போனவையே அமெரிக்காவையும், இந்தியாவையும் வைத்து அரசும் புலிகளை மிரட்டப் பார்க்கிறது. அதற்கு மசியாத புலிகள் போர் வந்தால் அதனை எதிர்கொள்ளத் தயாரெனவும் சூளுரைக்கின்றனர். எனவே, மிரட்டல்கள் பழையவைதான். ஆனால், அதன் வழி பிறக்கப்போகும் முடிவுகள் தான் புதியவையாக இருக்கலாம்.**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*
*வைத்தூறு போலக் கெடும்*

திருக்குறள

# நமது நோக்கு

## மன்னிக்கவே முடியாத வரலாற்றுத் துயரம் !!

இரத்த ஜூலை, கறுப்பு ஜூலை என்றெல்லாம் வர்ணிக்கப்படும் 1983 ஆம் ஆண்டின் ஆடிக்கலவர அவல வரலாற்று நிகழ்வு, நடந்து நேற்றுடன் இருபத்தொரு ஆண்டுகள் முடிந்துள்ள போதிலும், இரத்தக்கறை படிந்து பீதியில் உறைந்த அந்த நாட்களின் அதிர்ச்சிப் பதிவுகள் வரலாற்றிலும், மக்கள் மனதிலும் இன்னும் அப்படியே ஆழமான வடுக்களாகி, என்றுமே மறக்க முடியாத காலத்துயராகி நிற்கவே செய்கிறது.

அதன் பின் இருபது 'ஆடி'கள் வந்து போய்விட்டன.

ஆனாலும், அந்தக் கலவரச் சூழல் இன்னமும் மாறவேயில்லை. மாற்றும் மனப்பக்குவமும் பேரினவாத விஷம் தலைக்கேறிய சிங்கள ஆட்சித் தலைமைகளுக்கு இன்னமும் ஏற்படவில்லை. ஏற்படும் சாத்தியக்கூறும் தென்படுவதாகவும் இல்லை. அந்தக் கலவரம், தமிழ் மக்களின் சுதந்திர தாக த்தை நிரந்தரமாக்கியதுடன், அதனைத் தாங்களே தணிக்க வேண்டிய எழுச்சி நிலைக்கு - ஒரு விடுதலைப் போரை முன்னெடுத்து, பௌத்த சிங்கள அரச பயங்கரவாதத்தின் தூண் டுதலின் பேரிலான இராணுவ ஒடுக்குமுறைக்கு எதிரான யுத்தம் ஒன்றினை முன்னெடுத்து, அதனை முறியடிக்க வேண்டிய வரலாற்று விதிக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியது.

கிட்டத்தட்ட இரு தசாப்த கால யுத்தம் தமிழ் மக்களின் தாயகப் பிரதேசங்களை நிர்மூலமாக்கி, அவர்களின் வாழ்வை சின்னாபின்னமாக்கும் சிங்கள ஆட்சியாளரின் பகையுணர்வு வெளிப்பாடாகவே நிகழ்ந்தபோதும், தமிழ் மக்கள் இறந்த சாம்பலில் இருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவை போன்று மீண்டும் மீணடும் சுதந்திர உயிர்ப்புக் கொண்டமையையும் வரலாறு பதிவு செய்து கொண்டே வந்துள்ளது.

இரு தசாப்த காலப் போரில் இடைக்கிடை சமாதானம் பற்றிய பேச்சுக் குரல்கள் மிகச் சன்னமான குரலில் ஒலித்து, சந்தேகத்திற்குரிய அமைதி நிலையைத் தோற்றுவித்த போதும், அரச படைகளின் துப்பாக்கிச் சன்னங்களின் சீற்றம் அந்த அமைதி நிலை தொடர அனுமதித்ததே இல்லை. அரசுகள் அதற்கான சூழல நிரந்தரமாவதைத் தோற்றம் கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கியதுமில்லை.

ஆட்சிகள் மாறி, கொள்கைகள் மாறி, அதிகாரங்கள் கைமாறிய போதிலும், ஆட்சிபீடங்களில் அமர்ந்து வந்தவர்களின் பேரினவா தச் சிந்தனையில் எந்த மாற்றத்தையும் வரலாறு கண்டதே இல்லை.

1983 ஆம் ஆண்டு ஆடியைத் தொடர்ந்து வந்த எந்த ஆடியும் தமிழ் மக்களுக்கும், அவர்களின் மண்ணுக்கும் எந்த விதமான ஆத்மார்த்தமான - கலவரமற்ற அமைதி நிலையைத் தந்ததே இல்லை.

இதோ, இதனை எழுதும் இந்தக் கணமும் மனச்சஞ்சலமற்ற அமைதி நிலையை எந்தவொரு இலங்கைத் தமிழனும் அனுபவிப்பானா என்பது சந்தேகமே....!

1983 ஆம் ஆண்டுக்குப் பின்வரும் இன்றைய இருபத்தோராவது ஆடியிலும் போரா? சமாதானமா? எனக்கேட்டு தமிழினத்தை யுத்தக் களத்திற்கு அழைத்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் குரல் இன்னமும் ஒலிக்கவே செய்கிறது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா விட்ட இடத்தை பிரேமதாஸ நிரப்பினார். அவர் விட்ட இடத்தை டி.பி.விஜேதுங்கவும், அவருக்குப்பின் சந்திரிகா அம்மையாரும் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர் இல்லை என்பதை நிரூபித்துக் காட்டுவதில் வல்லவர்களாவே, தமிழினத்தவரின் உரிமைப் பிரச்சினை தொடர்பான விடயத்தில்... யுத்தசன்னதம் கொண்டவர்களாகவே, தம்மை இனங்காட்டிக்கொண்டனர். அதனால்தான், இன்னமும் இலங்கையின் ஜனநாயகம் வாளேந்திய சிங்கத்தின் இரத்த வெறி தீராத நிலையிலேயே தமிழினத்தை இன்னமும் ஆயுத முனையில் அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

1983 ஆம் ஆண்டின் சிங்கள ஆட்சியாளர்களின் இனவெறியாட்ட கலவர அழிவுகளுக்காகத்தான், தமிழ் மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோருவதாக இருபத்தொரு ஆண்டுகளின் பின் இப்போது ஜனாதிபதி சந்திரிகா கூறுகின்றார்.

அது மட்டுமல்ல, இதே ஆடிக் கலவர வன்முறைகளுக்கு பொறுப்பான, அதனுடன் நேரடித் தொடர்புடையவர்களான அந்த நேர ஆட்சியாளரும் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும் எனவும் அவர் அறிவித்தார்.

அதுமட்டுமல்ல, ஆண்டுக்கு 5000 கோடி ரூபாய்க்கு மேல் செலவழித்து ஏழாண்டுக்கும் அதிகமான காலம் தமிழ் மக்களுக்கு எதிரான கொடிய யுத்தம் ஒன்றை நடத்தி, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் அழிவுக்கும், அவலங்களுக்கும் காரணமான இதே ஜனாதிபதி அன்றைய ஆடிக்கலவரத்தில் பாதிப்புற்றோருக்கு 73 மில்லியன் நஷ்ட ஈட்டை வழங்கப்போவதாகவும் அறிவித்தார். இன்றைய ஜனாதிபதியின் தந்தையார் பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் அவர் சுங்கான் புகைத்தபடி மௌனமாக இருக்க 1958 ஆம் ஆண்டில் முதல் முறையாக இனக்கலவரம் இந்த நாட்டில் சிங்களப் பேரினவா திகளால் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

1960 ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் இதே ஜனாதிபதியின் தாயார் சிறிமாவோவின் காலத்தில்தான், தமிழ் மக்களின் அமைதிவழி உரிமைப்போராட்டமான சத்தியாக்கிரகம் ஆயுத முனையில் ஒடுக்கப்பட்டதும், உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகள் மேற்கொள்ளப்பட்ட வரலாறு நிகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

1995 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரையிலான ஏழாண்டு காலத்தில்தான் இதே ஜனாதிபதியின் போர் நெறிப்படுத்தலில் நவாலி சென்பீட்டர்ஸ் தேவாலயம், நாகர்கோவில், சுதந்திரபுரம் மந்துவில் எனத் தொடர் குண்டுவீச்சுப் படுகொலைகளும ஆயிரக்கணக்கில் அப்பாவித் தமிழ் மக்கள் காணாமற்போன வரலாறும், செம்மணிப்புதைகுழி விவகாரமும் வெற்றிகரமான இன வெறி நடவடிக்கைகளாக நடந்தேறின...


இவற்றிற்கெல்லாம் பகிரங்கமாக தமிழ் மக்களிடம் யார் - எப்போது மன்னிப்புக் கேட்கப்போகின்றார்களாம்?

1983 ஆம் ஆண்டு ஆடிக்கலவரத்திற்கே மன்னிப்புக்கோர 21 ஆண்டுகள் பிடித்துள்ள நிலையில்... இதற்கு இன்னும் இரு தசாப்தங்கள் கூட ஆகலாம்....

ஆனாலும், இவையெல்லாம் மன்னிக்கவோ, மறக்கவோ கூடிய விடயங்களாக தமிழ்மக்கள் கருதுவதாக இல்லை.

இவைகள் தனிமனித துயரங்களல்ல...தமிழினத்தின் வரலாற்றுத் துயரம்.

# நாடும் நடப்பும்




### ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரியொருவர்

## போலி தேசிய அடையாள அட்டைகளை வழங்கி நாளொன்றுக்கு 2 இலட்சம் ரூபா சம்பாதிக்கிறாராம்

ஆட்பதிவுத் திணைக்களத்தில் பணியாற்றும் உயர் அதிகாரியொருவர், சட்டத்துக்கு முரணான வகையில் நூற்றுக்கும் அதிகமான தேசிய அடையாள அட்டைகளை வழங்கி, நாளொன்றுக்கு 2 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகையை சம்பாதிப்பதாக இரகசியப் பொலிஸாரின் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

சந்தேகத்துக்குரிய இந்த உயரதிகாரியைக் கைது செய்வதன்பொருட்டு, விசேட இரகசியப் பொலிஸார் பலபேரை விசாரணை செய்துள்ளனர்.

இந்த உயரதிகாரி வருடக்கணக்காக இந்த வர்த்தகத்தை நடத்தியதாகவும், இவர் விடுதலைப் புலி உறுப்பினர்கள் பலருக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்கிப் பணத்தைப் பெற்றுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் குண்டை வெடிக்க வைத்து, தற்கொலை செய்துகொண்ட பெண்ணுக்கும் போலி தேசிய அடையாள அட்டையைத் தயாரித்து வழங்கியதும், இந்த உயரதிகாரியே என்பதான தகவலும் வெளியாகியுள்ளதாம்.

இதுவரை நடைபெற்ற விசாரணைகளின் அடிப்படையில், இந்த உயரதிகாரி உட்பட ஆட்பதிவுத் திணைக்களத்தின் உத்தியோகத்தர் குழுவினால் நடத்தப்பட்ட வியாபாரம் வெளியாகியுள்ளது.

இதன்படி இந்தத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் நான்குபேர் - முன்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் இதனுடைய உத்தியோகத்தர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## ஹெல உறுமய – அரசு விரைவில் இணையும்

ஜாதிக ஹெல உறுமய விரைவில் அரசாங்கத்துடன் இணையுமென அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் வர்த்தக மற்றும் நுகர்வோர் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்,

அரசாங்கத்தால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பிரேரணைகளை ஆதரிப்பதற்கு ஜாதிக ஹெல உறுமய இணக்கம் தெரிவித்திருப்பதாகவும், குறிப்பாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள அரசின் வரவு - செலவுத்திட்டத்துக்கு ஆதரவு வழங்குவதென ஜாதிக ஹெல உறுமய தீர்மானித்துள்ளதாகவும் வர்த்தக மற்றும் நுகர்வோர் அமைச்சர் ஜெயராஜ்பெர்னாண்டோ புள்ளே மேலும் தெரிவித்தார்.

## கொழும்பு – கொச்சி இடையே படகுச் சேவைக்கு இணக்கம்!

கொழும்புக்கும் - கொச்சிக்கும் இடையே பயணிகள் கப்பல் சேவையை நடத்துவதற்கு இந்திய அரசு இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

ஏற்கனவே கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவையை நடத்துவதற்காக, கடந்த அரசாங்கம் எடுத்த முயற்சிகள் இந்திய அரசின் எதிர்ப்புக்காரணமாக இடைநிறுத்தப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சர்கள் குழுவொன்று - இந்தியாவுக்குப் பயணம் செய்தபோதே கொச்சி - கொழும்பு கப்பல் சேவையை நடத்துவதற்கு இணக்கம் எட்டப்பட்டது.

கொச்சித் துறைமுகம் கேரளாவில் அமைந்திருப்பதால் எதிர்ப்புக்கள் மேற்கிளம்பாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

### நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான உணவை

## நாட்டின் வர்த்தக நிலையங்களில் நிலவும் விலைகளுக்கேற்பவே வழங்கவேண்டும்

### அரசு, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை

நாடாளுமன்ற உணவுச்சாலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊழியர்கள், மற்றும் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் உணவு, பானவகைகளை நாட்டிலுள்ள வர்த்தக நிலையங்களில் நிலவுகின்ற விலைகளுக்கேற்ப வழங்கும்படி, அரசு, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற சபாநாயகர் டபிள்யு. ஜே.எம்.லொக்குபண்டாரவிடம் கடந்த புதன்கிழமை கோரிக்கைவிடுத்தனர்.

நாடாளுமன்ற உணவுச்சாலை சம்பந்தமாக தனியார் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சி சம்பந்தமாக அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே - நாடாளுமன்றத்தில் கிளப்பிய உரிமைப் பிரச்சினை பற்றி கேள்வி எழுப்புகையிலேயே, இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இந்த உரிமைப் பிரச்சினையைக் கிளப்பிய அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே, நாடாளுமன்ற உணவுச்சாலையில் வழங்கப்படும் உணவு வகைகளுக்கு நாட்டிலுள்ள வர்த்தக நிலையங்களில் அறவிடும் விலைகளில் வழங்கும்படி, எதிர்க் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டதால், அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி சபாநாயகரிடம் வேண்டுகோள்விடுத்தார்.

நாட்டில் நிலவும் விலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உணவினை வழங்கும் புதிய திட்டத்துக்குப் பக்கபலத்தையும் உதவியையும் வழங்குவதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் மகிந்த சமரசிங்க இது போன்ற வேலைத்திட்டங்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவுதரும் என்றார்.

உணவு வகைகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுப்பனவு வழங்குவதற்கான ஆலோசனையும், சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் - எப்படியாயினும நாடாளுமன்ற உணவுச்சாலையில் விலைகளை அதிகரிப்பதற்கு ஆதரவாக இருபகக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது விருப்பத்தினைத் தெரிவித்துள்ளமையால், அதுபற்றிக் கவனத்தில் எடுத்துக் கொள்வதாகவும் சபாநாயகர் சபையில் தெரிவித்தார்.

## கிளிநொச்சிக்கான மின் விநியோகத்தை விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்டத்துக்கான மின்விநியோக நடவடிக்கையை விஸ்தரிக்கவுள்ளதாக இலங்கை மின்சார சபையின வடபிராந்திய அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இநத விடயம் குறித்து அந்த வட்டாரங்களில் மேலும தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

கடந்தவாரம் முதல் கிளிநொச்சி நகரை அண்டிய 150 வீடுகளுக்கு மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டு, மின்சாரம வழங்கப்பட்டுவருகின்றன.

இந்த வீடுகளுக்குத் தற்போது 10 மணித்தியாலங்கள் மாத்திரமே மின்சாரம் வழங்கப்பட்டு வருகினறன. இதனை 24 மணித்தியால சேவையாக மாற்று வதற்கு முயற்சி எடுத்து வருகின்றோம்.

அடுத்த மாதம்முதல் - மேலும் 500 வீடுகளுக்கு மின் இணைப்புக்களைப் புதிதாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. முறுகண்டிக்கு அண்மையிலேயே கிளி நொச்சி மாவட்டத்துக்கான மின்விநியோக மையத்தினை அமைக்கத்திட்டமிட்டுள்ளோம். விரைவிலேயே கிளிநொச்சி மாவட்டத்தின் முழுப்பகுதிக்கும் மின் இணைப்பு வழங்கப்படவுள்ளது எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.(ப)

அரசியற் பார்வை — தி.தவபாலன்

# போரே அவரின் தேர்வாக இருப்பின், அதை தொடக்க முடியாத ஜனாதிபதி



இலங்கையில் தற்போது ஆளும் சந் திரிகா அரசு, போரைத் தொடக்கமுடியாது. அரசியற் தர்க்கவியல் அடிப்படையில் இதுவே முடிவாக இருக்கும். இதனை அரச றிவியலாளர் மு.திருநாவுக்கரசு குறிப்பிடு கின்றார்.

இலங்கையின் அரசுக்கட்சிகள், அவற்று க்கு ஆதரவுதரும் சர்வதேச சக்திகள் ஆகிய வற்றின் தளத்தில் அரசியற்தர்க்கத்தின் அடிப் படையில் சந்திரிகாபோரைத் தொடக்க முடி யுமா என்பது பற்றி அரசறிவியலாளர் மு.திரு நாவுக்கரசு விளக்குகிறார்.

போர் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக் குப் பாதகமானது. அது முற்பகுதியில் ஜே.வி. பியை வளர்க்கவல்லது. இலங்கை சுதந்திரக் கட்சியைத் தேய்க்கவல்லது. அரசியல் அரங் கில் போர் ஜே.வி.பி - ஐக்கிய தேசிய அணி களை முன்னிறுத்தும், பொருளாதார வளர்ச்சி யின்மை, போரின் துயரம், இராணுவத்தின் முத லாளித்துவத் தன்மை என்னும் மூன்று அம் சங்களும் இணைந்து, பிற்பகுதியில் ஜே.வி.பியை வீழ்த்தும்.

ஜே.வி.பி போன்றவற்றின் அதி தீவிரவா தம் எப்போதும் ஆரம்பத்தில் கவர்ச்சிகரமானது. அது முதலில் வேகமாகவும், வீச்சாகவும் எழும். பின்பு துயரங்கள் - பின்னடைவுகள் - தோல் விகள் என்பவற்றின் பின்னணியில் எழுந்த வேக த்தினைவிடவும் பலமடங்கு வேகத்தில் தலை குத்தி நிற்கும், வீழும். ஜே.வி.பியின் அதி தீவிரவாதமும் சிங்கள மக்களிடையே அத்த கைய நிலையையே அடையும்.

போரைச் சந்திரிகா தொடங்கினால், முத லில் ஜே.வி.பி எழும். சுதந்திரக் கட்சி விழும். அடுத்த கட்டமாக ஜே.வி.பியும் விழ ஐக்கிய தேசியக் கட்சியே எழும். இடது சாரித்தம னான அதிதீவிர எழுச்சி நிகழ்ந்த பிலிப்பை ன்ஸ், இந்தோனேசியா போன்ற நாடுகளில் அத்தகைய ஆட்சிகள் கவிழ்ந்து, முதலாளித் துவ தன்மைவாய்ந்த இராணுவம் எச்சி பெற் றதுபோல - சிங்கள அரசும் அடையும் என்பது மு.திருநாவுக்கரசின் ஒருபக்க நிலைப்பாடு.

இலங்கை இராணுவத்தில் ஜே.வி.பி சார்பு - சுதந்திரக்கட்சி சார்பு பிரிவுபினும் கூட அதிகம் அது முதலாளித்துவத் தன்மை வாய்ந்தது. ஆகவே, அது எழுச்சிபெற முடியாவிட்டாலும், தன் கொள்கை சார்ந்த ஐக்கியதேசியக் கட்சியை ஆதரிக்கும்.

மறுபக்கம் இது தமிழ மக்களுக்கு ஏற் படுத்தப் போகும் பாதிப்புப் பற்றிய அவ ரின் பார்வை குறிப்பிடுவதானதைப் பார்ப்போம்.

இலங்கையில் எத்தகைய நிலையினாலும், தமிழ் மண்ணைக் கட்டுப்படுத்தக்கூடிய நிலைமைக் கொழும்பு ஒரு போதும் அடைய மாட்டாது.

பேச்சுவார்த்தைகளிலான - சமஷ்டி முறை யிலான தீவுக்கு இலங்கை அரசியல் இருக் கும் என்பதே பெருமளவு தெளிவான உண்மை. அப்படியெனில், ஒருநாள் போர் நிச்சயமா னது என்பது முடிவு. அது போர் தொடர்பான இன்னொரு பக்கமாக மு.திருநாவுக்கரசு கூறுகிறார்.

போரின் இலாப நட்டங்கள் பற்றிய இன் னொரு பக்கமும் உள்ளது.

போரே சந்திரிகா அரசின் தெரிவாகுமானால், முதலில் இலங்கை சுதந்திரக் கட்சி ஜே.வி. பிக்கு பலியாகுவதுதான் போரின் முதற்பெறு பேறாக அமையும்.

அதேவேளை - பண்டாரநாயக்க குடும் பத்தின் தலைமைக்கு அப்பால், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையே வளரும் என சந்திரிகா கருதுவாரானால், ஒருபோர் மூலம் தனது வாய்பை ஈட்டலமென அவர் ஒரு கணக்குப் போடுவாரானால், போரைச் சந்தி ரிகா தெரிவுசெய்ய ஒரு வாய்ப்பு உண்டு.

ஆனால், அரசியலின் தர்க்கபூர்வ வளர் ச்சியின்படி அது சாத்தியப்பாடல்ல. பதிலாக அப்படியான நிலைப்பாடு இறுதியில் சுதந் திரக் கட்சி ஜே.வி.பிக்கு அழிவாகவே முடியும்.

இது போரின் அரசதரப்பின் இன்னொரு பக்கமாக அவர் கூறுகின்றார்.

போர் தொடர்பான உலகின் பக்கமும், நிலைப்பாடும் கூட இருக்கின்றது. உலக புதிய பொருளாதாரக் கோட்பாட்டை நிரா கரிக்கும் ஜே.வி.பியின் வேகமான வளர் ச்சியைத் தடுக்க உலக முதலாளித்துவத் துக்கு போர் தேவைப்படுகின்றதோ என்ற ஒரு கேள்வி எழுகின்றது.

அதேவேளை, இது உலக முதலாளி களுக்கு ஒரு ஆபத்தையும் கொடுக்கும்.

அது இலங்கையை மையமாகக் கொள் ளக்கூடிய உல்க முதலாளித்துவ வர்த் தகத்தைப் பாதித்துவிடும் என்ற அச்ச மும் அதற்கு உண்டு என்கிறார் அரசறிவிய லாளர் திருநாவுக்கரவு.

ஒரு அரசதந்திரம் மிக்க அரசியறதர் க்கங்களை ஆராய்கின்ற ஒரு அரசுத் தலை வராக சந்திரிகா இருக்கின்றவரை, இது சாத் தியப்படும் ஒன்றாக இருக்கும். இந்த அரசி யற்தந்திரம் -

தர்க்கம் என்ற நீண்ட நோக்குச் செயற் பாடுகளை ஐக்கிய தேசியக் கட்சியே பின் பற்றி வருகின்றது. ஆனால், சந்திரிகா குழப்பங்களும், வெறித்தனமும் மிக்க ஒரு தலைவராக இருந்து வருவதால் -

அரசியற்தர்க்கங்களுக்குட்பட்டுத் தான் அவர் நடந்து கொள்வாரா என்பதை 1994ஆம் ஆண்டு முதலான அவரின் செயல்களை அவதானித்தால் விளங்கிக் கொள்ளலாம்.

---

வன்னிச் செலவு - பகுதி 4 — கனடாவிலிருந்து - நக்கீரன்

# செல்லாக் காசாகிவிட்ட தமிழ் மொழி....!



ஓமந்தை மற்றும் முகமாலை இராணுவத்தடை முகாம்களில் மட்டும் கொஞ்சம். தமிழ் வாழ் கிறது. அங்கு கடமையாற்றும் சிங் கள காவற்துறையினர் மற்றும் இராணு வத்தினர் பயணிகளோடு தமிழில் மரியாதையோடு பேசுகிறார்கள்.

ஐயா உங்களுடைய பெயர் என்ன? எங்கிருந்து வருகிறீர்கள்? எங்கு போகிறீர்கள்?

எனக் கேள்விகளைத் தமிழில் கேட்டு பதில்களை ஏடுகளில் சிங்களத்தில் பதி கிறா ர்கள். மொத்தத்தில் தமிழ் மொழிப் பயன்பாடு ஏட் டுச்சுரைக்காயாகத்தான் இருக்கிறது. அரசியல் யாப்பில் தமிழும் ஒரு உத்தியோகமொழி என வேண்டா வெறுப் பாகப் போட்டதால் வந்தவினை இது.

வேண்டாப் பெண்ணுக்கு கை பட்டாலும் குற்றம். கால் பட்டாலும் குற்றம் என்று தமி ழில் ஒரு பழமொழி இருக்கிறது.

இலங்கை அரசைப் பொறுத்தளவில், அது பச்சையாக இருந்தாலும் சரி, நீல மாக இருந்தாலும் சரி, தமிழ் மொழி ஒரு வேண்டப்படாத மொழியாக தீண்டப்படாத மொழியாக இருக்கிறது.

தென்னிலங்கையில் பெரும்பாலும் திணைக்கள அறிவித்தல்கள், திணைக்க ளப் பெயர்ப்பலகைகள் சிங்கள மொழி யில் மட்டும் இருக்கின்றன.

சிங்கள நகரங்கள் . பட்டினங்கள் இர ண்டிலும் உள்ள அங்காடிகள் மற்றும் நிறு வனங்கள் தனிச் சிங்களத்தில் பெயர்ப்பல கைகளை எழுதி வைத்துள்ளன. அத னால், நகரங்கள் பட்டினங்கள் ஊடாகப் பயணம் செய்யும்போது எந்த நகரைப் பட் டினத்தைக் கடந்து போகிறோம் என்பது புரியாமல் இருக்கிறது.

மிக அருமையாகவே சிங்களத்தோடு ஆங்கிலத்திலும் பெயர்ப்பலகைகள் எழுதி வைக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் ஓடும் பேரூந்துகளின் பெயர்ப் பலகைகள் தனிச் சிங்களத்தில் மட்டும் இருக்கின்றன. சில பேரூந்துகளில் ஓரமாக சின்ன எழுத்தில் தமிழிலும் எழுதி வைத் துள்ளார்கள். ஆனால் அதை வாசிக்கும் முன்னர் பேரூந்து உங்களைக் கடந்து பறந்து விடும்!

குடிவரவு - குடியகல்வு திணைக்களத் தில் மருந்துக்கும் தமிழ் இல்லை. அங்கு இருக்கும் ஊழியர்களுக்கு சிங்களத்தை விட வேறுமொழி அறிவு அடியோடு கிடை யாது. உயர் அதிகாரிகள் மட்டும் விதி விலக்கு. ஆனால், அவர்களும் தடக்கித் தடக்கியே ஆங்கிலம் பேசுகிறார்கள்.

எனது நண்பர் இரா. குணநாதன் சொன் னார். சிங்களம் தெரியாதவர்கள் திணைக் களங்களில் போய் எந்தக் கருமத்தை யும் ஆற்ற முடியாதாம். ஆங்கிலத்தில் உரை யாடக்கூடிய ஊழியர்கள் யாருமே கிடை யாது. இவர் பேசுகிற ஆங்கிலம் அவர்க ளுக்குப் புரியவில்லை! அவர்கள் பேசு கிற சிங்களம் இவருக்கு விளங்கவில்லை!

தன்னால் முடியாததைத் தன்னோடு வந்த சிங்களச் சாரதி தனது தாய் மொழியில் பேசி மிக எளிதாக செய்து முடித் தார் எனச் சொன்னார்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களே தங் களுக்குப் புரியாத சிங்கள மொழியில் கடிதங் கள் வருகிறதெனப் புலம்புகிறார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கே இந்தக் கதி யென்றால், மற்ற சாதாரண மக்களைக் கேட்கவா வேண்டும்?

நவம்பர் 14, 1987ஆம் ஆண்டில் 13ஆவது சட்டதிருத்த மூலம் தமிழ் உத்தியோக மொழி எனவும், ஆங்கிலம் இணைப்பு மொழி எனவும் அறிவிக்கப்பட்டது.

டிசெம்பர் 17, 1988ஆம் ஆண்டில் 16 ஆவது சட்டதிருத்த மூலம் சிங்களமும், தமிழும் நாட்டின் ஆட்சி மற்றும் சட்ட வாக்க மொழிகள் என அறிவிக்கப்பட் டன. வட-கிழக்கில் தமிழ் ஆட்சி மொழி. எஞ்சிய 7 மாகாணங்களிலும் சிங்களம் ஆட்சி மொழி. மொத்தம் 17 ஆண்டுகள் கழிந்த நிலையிலும் அந்தச் சட்ட திருத் தம் செல்லாக் காசாகவே இருக்கிறது.

தேசிய நீரோட்டத்தில் கலந்துவிட்டோம் என்று கூறிக்கொண்டு, நாடாளுபவர்க ளது கால்களை நக்கிப் பிழைக்கும் அமைச்சரால் கூட தமிழ்மொழிக்கு உரிய இடத்தைப் பிடித்துக்கொடுக்க முடிய வில்லை!

ஏயர் கனடாவில் - கனடாவின் உத் தியோக மொழிகளான ஆங்கிலம் பிரஞ்சு இரண்டிலும் அறிவிப்புச் செய்கிறார்கள். ஏயர் கனடாவின் தலைமையகம் கியூ பெக் மாகாணத்தில் இயங்கவேண்டும் என் பது கட்டாயம். இதற்குக் காரணம் கனே டிய நாட்டின் சட்ட திட்டங்களே.

கனடாவில் எந்த அமைச்சுக்குப் போனா லும், எந்த திணைக்களத்தோடு தொடர்பு கொண்டாலும் முதலில் கேட்கப்படுகிற கேள்வி "நீங்கள் எந்த மொழியில் சேவை பெற விரும்புகிறீர்கள்?" என்பதுதான்.

மத்திய அரச மட்டத்தில் ஆங்கிலம் பிர ஞ்சு மொழி இரண்டிலும் சேவை வழங் காத அமைச்சுக்களையோ, திணைக்களங் களையோ மருந்துக்கும் பார்க்கவே முடி யாது!

கனடாவின் மொத்த மக்கள் தொகை 31,414,000. இதில் 17,521,880 பேர் ஆங் கிலத்தைத் தாய் மொழியாகக் கொண் டவர்கள். 6,782,320 பேர் பிரஞ்சு மொழி யைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். ஆங்கிலம் அல்லது பிரஞ்சு மொழிகளை தாய்மொழியாகக் கொள்ளாதவர்களின் எண்ணிக்கை 5,334,770.

1996ஆம் ஆண்டுக்குப் பின்னர் மக் கள் தொகை சராசரி 4.00 விழுக்காட்டால் கூடியபோது, ஆங்கிலம் அல்லது பிரஞ்சு மொழியை தாய்மொழியாகக் கொள்ளாத வர் தொகை 12.5 விழுக்காடாகக் கூடி யது! இது புதிய குடிவரவாளர்களில் பெரும் பாலோர் ஆங்கிலம் அல்லது பிரஞ்சு மொழி பேசாதோர் என்பதைக் காட்டுகிறது. ஆனால், இப்போது குடிவருவோர் ஆங்கிலம் அல் லது பிரஞ்சு மொழி தெரிந்தவர்களாக இருந் தால் அவர்களுக்கு முன்னுரிமை (கூடு தலாக 15 புள்ளிகள்) வழங்கப்படுகிறது.

கடந்த காலங்களில் ஆங்கிலம் அல் லது பிரஞ்சு மொழியை தாய்மொழியா கக்கொள்ளாத குடிவரவாளர்கள் தொகை அதிகரித்து வந்ததால், கனடா துரித கதியில் பன்மொழி (multilingual society Commerce) பேசும் சமுதாயம் ஆக மாற்றம் அடைந்து வருகிறது.

தாய்மொழி என்றால் என்ன? அதன் வரை விலக்கணம் யாது? தாய்மொழி என்பது ஒருவர் குழந்தைப் பருவத்தில் வீட்டில் படி த்த முதல் மொழியாகவும் புள்ளிவிபரக் கணக்கெடுப்பின்போது, அந்த மொழியை இன்னமும் பேசத்தெரிந்திருப்பவர் என வரை விலக்கணம் செய்யப்பட்டுள்ளது.

கனடாவில் நூறு மொழிகளுக்கு மேல் பேசப்படுகிறது என்பது பலருக்கு வியப் பாக இருக்கலாம். இதில் சீனம், பஞ்சாபி, அரபு, உருது மற்றும் தமிழ் அடக்கம்.

கனடாவில் ஆங்கிலம் பிரஞ்சு இர ண்டு மொழிகளும் உத்தியோக மொழி கள் என 1969ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தில் நிறைவேற்றப்பட்ட முதல் உத் தியோக மொழிகள் சட்டம் (Official Lan guages Act) பிரகடனப் படுத்தியது. இந்தச் சட்டம் செப்தெம்பர் 15, 1988ஆம் ஆண்டு முதல் நடைமுறைப் படுத்தப்பட்டது. இந் தச் சட்டத்தின் நோக்கம் ஆங்கிலம் பிரஞ்சு மொழி இரண்டுக்கும் இணைப்பாட்சி மட்டத தில் சமவுரிமை வழங்கப்படுவதை உறுதி செய்து கனேடிய உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் பட்டயத்தின் (Canadian Char ter of Rights and Freedoms) கீழ் வழங்கப் பட்டுள்ள மொழி உரிமைகளை மதித்து நடப்பதாகும்.

கியூபெக் மாகாணத்தின் மக்கள் தொகை 7.2 மில்லியன் அல்லது 72 இலட்சம் (2001) ஆகும். இதில் பிரஞ்சுக்காரர்கள் 81.2 விழுக்காடு. ஆங்கிலேயர் 8.0 விழுக் காடு. ஏனையவர் 9 விழுக்காடு. பூர்வீக மக்கள் 1 விழுக்காடு. உத்தியோக மொழி பிரஞ்சு.

கனடாவில் 10 மாகாணங்கள் உள் ளன. அமெரிக்காவில் 50 மாநிலங்கள் உள் ளன. இதில் கியூபெக் மாகாணத்தில் மட் டுமே பிரஞ்சுமொழி பேசுவோர் பெரும் பான் மையாக உள்ளனர்.

இதனால், கியூபெக்கில் வாழும் பிர ஞ்சு மக்கள் தங்கள் மொழி, கலை, பண் பாட்டை ஆங்கிலேயரும் ஆங்கிலமும் காலப் போக்கில் விழுங்கி ஏப்பமிட்டு விடுமோ என்று பயப்படுகிறார்கள். இதனால் பல தற் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளார் கள்.

கியூபெக்கில் இரண்டு மொழிச் சட் டங்கள் உண்டு. ஒன்று கனேடிய நாடா ளுமன்றத்தால் இயற்றப்பட்டது. மற்றது கியூபெக் தேசிய சபையால் இயற்றப்பட் டது.

1982ஆம் ஆண்டிலிருந்து இரண்டு நாடா ளுமன்றங்களும் (கனேடிய மற்றும் கியூ பெக்) அடிப்படை உரிமைகள் மற்றும் சிறு பான்மை மக்களது கல்வி உரிமைகள் போன்றவற்றை உறுதிப் படுத்தும் கனே டிய உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக் கான பட்டயத்தை பின்பற்ற வேண்டும் என்ற கட்டாயம் உள்ளது.

கியூபெக் பிரஞ்சுமொழி பட்டயம் (Char ter of the French language) (சட்ட மூலம் இல.101) பெரும்பான்மை மக்களது மொழி யான பிரஞ்சு மொழியை கியூபெக்கின் ஒரே உத்தியோகமொழியாகப் பிரகடனப்படு த்தியுள்ளது. இதன் நோக்கம் கியூபெக் அரசின் மொழி, சட்டமொழி பிரஞ்சு மொழியாக இருக்கும். அத்தோடு நாளாந்த வேலை, கல்வி கற்பித்தல், கல்வி கற்றல், தகவல் தொடர்பு, பெருவணிகம் (commerce) வணி கம (business) போன்றவற்றிலும் பிரஞ்சு மொழியில் மட்டும் இருக்கவேண்டும் என்பதே.

மேலும் இந்தச் சட்டம் சரியாக கடைப் பிடிக்கப்படுகிறதா என்பதைக் கண்கா ணிக்க தனி பொலிஸ் (Language Police) அமைக்கப்பட்டு இருக்கிறது.

ஒரு வழக்கில் வணிக நிறுவனங்க ளின் வெளிப் பெயர்ப் பலகைகள், பிர ஞ்சு மொழியில் மட்டும் எழுதப்படவேண் டும் என்ற சட்டம் கனேடிய உரிமைகள் மற் றும் சுதந்திரங்களின் பட்டயத்தை மீறு வதாக உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அந்தத் தீர்ப்பையடுத்து 1993 ஆம் ஆண்டு சட்ட மூலம் இல.86 வணிகப் பெயர்ப் பலகைகள் இரு மொழிகளிலும் எழுத லாம் என்றும் - ஆனால், பிரஞ்சு மொழி க்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண் டும் என்றும் நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டது.

மதத்தைப் பொறுத்தளவில் ஒன்ரே றியோ மாகாணம் கத்தோலிக்க மத பாட சாலைகளை ஆதரிக்க வேண்டும். அதே சமயம் கியூபெக் மாகாணம் புறட்டஸ் தான் மத பாடசாலைகளை ஆதரிக்கவேண் டும்.

கனேடிய மொழிக்கொள்கை பற்றி இவ் வாறு விரித்து எழுதுவதற்குக் காரணம் இலங்கை போலவே இரு மொழி பேசும் மக்களைக் கொண்ட கனடா - எவ்வாறு தனது மொழிச் சிக்கலை நீதியாகவும், நியா யமாகவும், புத்திசாலித்தனமாகவும் தீர் த்து வைத்திருக்கிறது என்பதை எடுத்துக் காட் டவே!

விமானம் கிளம்பும்போது தற்செயலாக விபத்துக்குள்ளாக நேரிட்டால், எப்படி இருக்கைக்கு கீழுள்ள உயிர்காப்பு அங்கி மற்றும் முகமூடியை அணிந்துகொண்டு அவசர வாசல்களால் வெளி யேறவேண்டும் என்பதைச் செய்து காட்டுகிறார்கள்.

முன்னர் விமானப் பணிப்பெண்கள் இந்த நெறிமுறைகளை நேரடியாகச் செய்து காட் டுவார்கள். இப்போது அதனை தொலைக் காட்சியில் காட்டுகிறார்கள். மட்டையிலும் எழுதி வைக்கிறார்கள்.

ஏயர்லங்கா - இந்த ஒன்றில் மட்டும் தமிழிலும் விளக்கம் அளிக்கப்படுகிறது.

ஒரு அவசரகால நிலையில் வெளியேற வேண்டும் என்றால், முன்கூட்டியே வாச ல்கள் எங்கிருக்கின்றன, இருக்கைப் பட்டியை எப்படிக் கழட்டவேண்டும் என்பனவற்றைத் தெரிந்து வைத்திருங்கள்.

விமானத்தில் காற்று அமுக்கம் ஏற் பட்டால், இருக்கையில் உட்கார்ந்து பட்டி யைப் பூட்டுங்கள். முகமூடியை எடுத்து முகத் தில் மாட்டிக்கொண்டு இருக்கையில் இரு ங்கள்.

விமானம் கடலில் விழும் அபாயம் ஏற் பட்டால், உயிர்காப்பு அங்கியை அணி ந்து அதில் காற்றை ஊதுங்கள். நீந்த முடி யுமென்றால் நீந்தி - சக பயணிகளுடன் சேர்ந்து கொள்ளுங்கள்.

இதெல்லாம் நடக்கிற காரியமா? விமா னம் விபத்தில் சிக்கும்போது, இந்த அங் கியை எல்லாம் மாட்டிக்கொள்ள நேரம் இருக்குமா? காற்றை ஊதி பெருப்பிக்க நேரம் இருக்குமா? முகமூடியை மாட்ட நேரம் இருக்குமா? என்றெல்லாம் கேட்கத் தோன் றும். உண்மையில் ஆபத்தான நேரங்களில் அவை பயன்பட்டிருக்கின்றன.

லண்டன் - கொழும்புக்கு இடையிலான தூரம் 8711 கி.மீ. பறக்க எடுக்கும் நேரம் 10 மணி 10 நிமிடங்கள். இந்தத் தரவை விமானி ஒலிபெருக்கியில் அறிவித்தார். (தொடரும்)

# துருக்கியில் ரயில் தடம் புரண்டதில் 139 பேர் பலி! நூறுக்கு மேல் காயம்!!



துருக்கியின் அங்காரா நகரிலிருந்து இஸ்தான்புல் நகர்நோக்கிப் பயணிகள் ரயில் சென்றுகொண்டிருந்தது. அந்த அதிவேக ரயிலில் 300 இற்கும் மேற்பட்ட பயணிகள் பயணஞ்செய்து கொண்டிருந்தனர்.

அந்த அதிவேக ரயில் சகாரியா மாகாணத்தில் சென்றுகொண்டிருந்தபோது திடீரென்று தடம்புரண்டது. இதில் 4 பெட்டிகள் மற்றும் என்ஜின்கள் தண்டவாளத்தை விட்டு விலகிக் கவிழ்ந்தன.

இந்த விபத்தில் ரயில்ப் பயணிகள் 139 பேர் பலியாகிவிட்டனர். 100 இற்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர். பலியானவர்களில் பெண்கள் மற்றும் சிறுவர்களும் அடங்குவர். காயம் அடைந்தவர்கள் சகாரியா மாகாணத்தில் உள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அங்கு அவர்களுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. 128 பேர்தான் பலியானதாக அரசு தரப்பில் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்துக்கான காரணம் பற்றி விசாரணை நடைபெற்று வருகின்றது. கடந்த ஜூன் மாதந்தான் இந்த அதிவேக ரயில் பாவனைக்கு விடப்பட்டது. ஆனால், இந்தப் பாதையில் உள்ள தண்டவாளம் மிகப் பழமையானது. இந்த அதிவேக ரயில் செல்ல அந்தத் தண்டவாளம் ஏற்றது அல்ல என்று ஏற்கனவே அதிகாரிகள் புகார் கூறி வந்தனர். ஆனால், என்ஜினில் திடீர்க் கோளாறு ஏற்பட்டதால்தான் இந்த விபத்து நடந்ததாக இன்னொரு தரப்பினர் கூறுகிறார்கள்.

விபத்துக்கு நாசவேலை காரணமாக இருக்கலாமா என்பது குறித்தும விசாரணை நடைபெற்று வருகிறது. ரயில் அதிகவேகத்தில் செல்லவில்லை. சாதாரண வேகத்தில்தான் சென்றுகொண்டிருந்தது என்றும் கூறப்படுகின்றது.

## தாய்வான் போர்ப் பயிற்சி சீன அரசு கடும் கண்டனம்



சீனாவுக்கும், தாய்வானுக்கும் இடையே நாளுக்குநாள் பதட்டம் நீடித்து வருகிறது. இந்த நிலையில் தாய்வான் தனது எல்லைப் பகுதியில் சீனாவை நோக்கி ஏராளமான ஏவுகணைகளை தயாராக நிறுத்திவைத்துள்ளது. ஹூாங்குவாங் தீவுப்பகுதியில் தாய்வானின் பரசூட் படைவீரர்கள் தீவிர போர்ப்பயிறசியில் ஈடுபட்டுவருகின்றனர்.

தாய்வானின் இந்தப் போர்ப்பயிற்சிக்கு, சீனா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. தாய்வானின் நடவடிக்கை, ஆசிய - பசுபிக் பகுதியில் அபாயகரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் சீனா எச்சரித்திருக்கிறது.

## தாய்லாந்தில் மீளவும் பறவைக்காய்ச்சல்!



சீனா, சிங்கப்பூர், தாய்லாந்து உட்படப் பல்வேறு நாடுகளில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் பறவைக்காய்ச்சல் நோய் பரவி இலட்சக் கணக்கான கோழிகளைப் பலிவாங்கியது. 300 இற்கும் மேற்பட்ட மனித உயிர்களையும் இது பலிவாங்கியது. கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வரப்பட்ட பறவைக்காய்ச்சல் நோய் இப்போது மீண்டும் தாய்லாந்தில் பரவத்தொடங்கி இருக்கிறது.

தாய்லாந்தில் 15 மாகாணங்களில் இது பரவத்தொடங்கியுள்ளது. கோழிகள் மட்டுமன்றி புறாக்களையும் இது பாதித்துள்ளது. பாங்கொக் நகரில் புறாப்பண்ணை வைத்திருக்கும் ஒருவர் தனது புறாக்களுக்குக் கவலையோடு தீனிபோடும் காட்சி.

## செப்ரெம்பர் 11 தாக்குதல் குறித்த சுயாதீன விசாரணைக் குழுவின் அறிக்கையை வரவேற்கிறார் புஷ்

அமெரிக்காவில் 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்திய சுயாதீன ஆணைக் குழு தனது விசாரணை அறிக்கையை ஜனாதிபதி புஷ்ஷிடம் கையளித்திருந்தது. இந்த விசாரணைக்குழுவின் அறிக்கையை ஜனாதிபதி புஷ் வரவேற்பதாக அறிவித்தார்.

இந்த விச்ரரணைக்குழுவின் அறிகைகயின் படி அமெரிக்க நிர்வாகத்தின் சில பலவீனமான பகுதிகளைக் கண்டுபிடித்துக் கடத்தற்காரர்கள் செயற்பட்டதாகத் தெரிவித்திருந்தது. இதனைத்தான் முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்வதாகப் புஷ் தெரிவித்தார்.

அத்துடன் இந்த விசாரணைக்குழு பரிந்துரைத்த பலவிடயங்கள் ஏற்கனவே நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எந்த இடத்தில் அரசின் செயற்பாடு தேவையோ, அந்த இடத்தில் எமது நடவடிக்கையை மேற்கொள்வோம். அத்துடன் நாம் அனைவரும் ஒரு பொதுநோக்குடனேயே செயற்படுகின்றோம். எனவே இந்த விசாரணைக்குழுவின் ஒவ்வொரு பரிந்துரையையும் நாம் மிகவும் அவதானத்துடன் எடுத்துச் செயற்படுவோமெனவும் புஷ் தெரிவித்தார்.

விசாரணைக்குழுவால் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகளை அதிபர் புஷ் மிக விரைவில் நடைமுறைப்படுத்த வேண்டுமென, எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஜோன் ஹரி கேட்டுள்ளார்.

ஜனாதிபதியாக தான் தெரிவுசெய்யப்பட்டால் விசாரணைக்குழுவால் தெரிவிக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதத்தை ஏற்படுத்தமாட்டேன் எனவும் ஹரி தெரிவித்தார்.



## ஈராக்கின் பலூஜா நகரில் அமெரிக்கா விமானத் தாக்குதல்



பலூஜா நகரில் சந்தேகத்திற்கிடமான முறையில் இஸ்லாமியக் கிளர்ச்சியாளர்கள் தங்கியிருந்ததாகக் கூறப்படும் வீட்டின் மீது அமெரிக்க வான்படையினர் தாக்குதல் நடத்தியதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

அபு முசாப் அல் - சர்காவி தலைமையிலான அல்கொய்டாவின் உறுப்பினர்கள் தங்கியிருந்த வீட்டின்மீதே தாம் தாக்குதலை மேற்கொண்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

ஆனால், நேற்றுக்காலை அமெரிக்க வான் படையினர் நடத்திய தாக்குதலில் சிறுவர்கள் உட்பட ஐந்து பொதுமக்கள் காயமடைந்ததாக பலூஜாவிலுள்ள வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

சுமார் பத்திலிருந்து பன்னிரண்டு வரையான அல்கொய்டா சந்தேக நபர்கள் வீட்டின் முன் நடமாடியதாகவும், அதன்போதே விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இதனால் அந்தவீடு முற்றிலுமாகச் சேதமடைந்துவிட்டதாகவும் அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

இதேவேளை, சமரா நகரில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் இரண்டு அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர்.

வீதியோரமாகப் புதைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி வெடித்ததனாலேயே இவர்கள் இருவரும் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## தலிபான்களின் தாக்குதலில் 11 ஆப்கான் படையினர் பலி!

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்புப் படைவீரர்கள் 11 பேரை தலிபான்கள் சுட்டுக்கொன்றனர்.

சர்வதேச தீவிரவாதி ஒஸாமா பின்லாடனுக்குத் தஞ்சம் அளித்ததற்காகவும், அவரை வெளியேற்றத் தலிபான் அரசு மறுத்ததாலும் அமெரிக்கப் படை, ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்தியது.




இநதத் தாக்குதலில் தலிபான்களின் ஆட்சி அகற்றப்பட்டது. தற்போது ஹமீத் கர்சாய் தலைமையில் ஆட்சி நடக்கிறது. அமெரிக்கா தலைமையிலான சர்வதேசப் படைகள் ஆப்கானில் தங்கியுள்ளன.

தற்போது தலிபான்கள் சர்வதேசப் படைகள் மீது மறைந்திருந்து அடிக்கடி தாக்குதல் நடத்திவருகின்றனர்.

தலிபான் தலைவர் முல்லா முகமட் ஒமரின் சகோதரர் அமானுல்லாவை அமெரிக்கப் படையினர் கைதுசெய்ததற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக கடந்த 19 ஆம் திகதி உர்ஸ்கான் மாகாணத்தில் அமெரிக்கப் படைவீரர்கள் 11 பேரை தலிபான்கள் சுட்டுக்கொன்றனர்.

இதற்கிடையே கடந்த புதன்கிழமை ஹெலமாண்ட் மாகாணத்தில் உள்ள பாக்ரன் மாவட்டத்தில் இராணுவ வாகனத்தில் சென்றுகொண்டிருந்த ஆப்கான் வீரர்கள் 11 பேரை தலிபான்கள் திடீரெனத் தாக்குதல் நடத்தி சுட்டுக்கொனறனர். இந்தத் தகவலை ஆப்கான் அரசு உறுதிப்படுத்தியுள்ளது.

## ஸ்பைடர்மான் மடியில்

சீனாவின் ஷாங்காய் நகரில் சிற்பக் கலைக் கண்காட்சி நடைபெற்றுவருகிறது. இதில் இத்தாலியின் பெண் சிற்பி ரபாரமா உருவாக்கிய சிற்பங்கள் தான் பெரும்பாலும் இடம்பெற்றுள்ளன.

அவர் உருவாக்கிய வெண்கல ஸ்பைடர்மான் சிலைதான் அனைவரையும் கவர்ந்துள்ளது. தலை குனிந்தபடி உட்கார்ந்திருக்கும் அந்தச் சிலைதான் அனைவரையும் கவர்ந்துள்ளது. தலை குனிந்தபடி உட்கார்ந்திருக்கும் அந்த சிலையின் மடியில் ஒருவர் உட்கார்ந்திருக்கும் காட்சி



## இஸ்ரேல் ஹெலிகொப்ரர்கள் காஸாவில் ஏவுகணைத் தாக்குதல்

காஸாப்பகுதியில் ஹமாஸ் போராளிகளின் ஆயுதம் தயாரிக்கும் தொழிற்சாலை மீது இஸ்ரேல் ஹெலிகொப்ரர்கள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதாகத் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

இஸ்ரேலுக்கு எதிராகத் தாக்குதல் நடத்தும் நோக்குடனேயே ஹமாஸ் அமைப்பினர் இந்தத் தொழிற்சாலையில் ஆயுதங்களைத் தயாரித்துவந்ததாகவும் அது தெரிவித்தது.

தாக்குதல் நடத்தப்பட்டவேளை பெருமளவு வெடிபொருட்கள் அந்தத் தொழிற்சாலையிலிருந்து வெடித்துச் சிதறியதாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

கடந்த புதன்கிழமை இரவு நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் ஒருவர் காயமடைந்ததாகவும், மற்றயவர் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் பலஸ்தீன வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# லெப்ரினன்ட் செல்லக்கிளி நினைவாக திருநெல்வேலி, நல்லூரில் நிகழ்வுகள்!

லெப்.செல்லக்கிளி அம்மானின் 21 ஆவது ஆண்டு நினைவுநாள் நேற்றுக் காலை திருநெல்வேலி - தபாற்கட்டைச் சந்தியில் அமைந்துள்ள அவரது நினைவுத்தூபிக்கு முன்பு, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் பகீரதன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் - ஈகச்சுடரை யாழ். பல்கலைக்கழக வணிகத் துறைத் தலைவர் சி.தேவராஜா, உயர்தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளர் இராஜரட்ணம், யாழ். பல்கலைக் கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் அன்ரன், யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

மலர்மாலையை யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், சர்வதேச மாணவர் பேரவையைச் சேர்ந்த குகன் ஆகியோர் அணிவித்தனர்.

இங்கு லெப்.செல்லக்கிளி அம்மான் நினைவுரையை யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் நிகழ்தினார்.

இந்த நிகழ்வில் போராளிகள், மாணவர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை மாலை நிகழ்வு சங்கிலியன் தோப்பு முன்றலில் யாழ். கல்வி வலய அதிகாரி புலேந்திரராஜா தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரை 2 ஆம் லெப்ரினன்ட் அமுதவாணனின் தந்தை எஸ். அமுதராஜா, லெப்.கேணல் செல்வக்குமாரின் தந்தை, நல்லூர் தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் பாலகுமாரன், ஓட்டோ ஊர்திச் சங்கத் தலைவர் றூபன், தென்மராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் கண்ணன், தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் சூ.சிறில் ஆகியோர் ஏற்றினர்.

தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றிவைத்தார்.

செல்லக்கிளி அம்மானின் திருவுருவப் படத்திற்கான ஈகச்சுடரையும், மலர்மாலையையும் நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் அணிவித்தார்.

இந்த நிகழ்வில் போராளிகள், சர்வதேச மாணவர் பேரவை உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## திறந்த நிலையில் வங்கிக் கதவு; மானிப்பாயில் நேற்று பரபரப்பு!

### எந்தப் பொருளும் திருட்டுப் போகவில்லை

மானிப்பாயில் மக்கள் வங்கிக் கிளை நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோரால் திறக்கப்பட்டு அதன் திறப்புக்கோர்வை வங்கிக்கருகே போடப்பட்டிருந்தபோதிலும் -

வங்கியிலிருந்த பணம், நகை என்பன பாதுகாப்பாக இருப்பதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

மானிப்பாய் பகுதியில் நேற்றுப் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது -

மானிப்பாய் மக்கள் வங்கியின் பணியாளர்கள் நேற்றுக்காலை வழமையான தமது கடமைக்காகச் சென்றவேளை வங்கியின் முன்பகுதிக் கதவுகள் திறந்த நிலையில் இருந்ததைக் கண்டனர்.

இதனையடுத்து அவர்கள் மானிப்பாய் பொலிஸார், மற்றும் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் சிவபாதவிருதையர் ஆகியோருக்கு இந்தத் தகவலை அறிவித்தனர்.

பொலிஸாரும் மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளரும் சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்று நிலைமைகளை அவதானித்தனர்.

வங்கியின் கதவுகள் திறந்திருந்தபோதிலும், வங்கிக்குள்ளிருந்த உடமைகளோ, பணமோ எடுத்துச் செல்லப்படவில்லையெனப் பிராந்திய முகாமையாளர் சிவபாதவிருதையர் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த வங்கியின் காசாளரை நேற்றுமுதல் காணவில்லை எனவும், அவர் வைத்திருந்த வங்கியின் சாவிக்கொத்து வங்கியருகில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் கொடுக்கப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இன்று சனிக்கிழமையாக இருந்தபோதிலும், மானிப்பாய் வங்கிக்கிளை காலையில் சிறிதுநேரம் திறந்திருக்கும் எனவும், திங்கட்கிழமையிலிருந்து அது தனது வழமையான செயற்பாடுகளை மேற்கொள்ளுமெனவும் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

### பெற்றோல்...

றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று மாலை அறிவித்தது.

நாட்டு மக்களுக்கு தேவையான எரிபொருட்களை உலக சந்தையுடன் ஒப்பிடும் போது அரசாங்கம் மானிய விலையில் வழங்கி வருவதாகவும் தவிர்க்கமுடியாத காரணத்தால் விலை அதிகரிக்கப்பட்டதாக பெற்றோலிய கூட் டுத்தாபனத்தின் தலைவர் தாலிய விதான தெரிவித்தார்.

பெற்றோலின் விலை அதிகரிப்பு குறித்த செய்தி நேற்று மாலை வெளியானதை அடுத்து குடாநாட்டிலுள்ள எரிபொருள் விற்பனை நிலையங்கள் நேற்று மாலை வழமையான நேரத்துக்கு முன்னதாகவே மூடப்பட்டதுடன் பெற்றோலின் விலை 75.50 சதம் என எழுதப்பட்ட அட்டை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் முன்கூட்டியே தொங்கவிடப்பட்டன.

இதேவேளை தனியார் எரிபொருள விற்பனையாளர்களும் நேற்று மாலை ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 80 ரூபாவாக விற்பனை செய்ததாகத் தெரியவருகிறது.

இந்த விலை அதிகரிப்பு பெற்றோல் வாகன உரிமையாளர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

### சிவராமின்...

பொலிஸார் சோதனையிட வந்த போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி மற்றும் சண்டே ரைம்ஸ் பத்திரிகையின் ஆசிரியர் ஆகியோர் சிவராமின் இல்லத்தில் இருந்தனர் எனத் தெரியவருகிறது.

இச்சந்தர்ப்பத்தில் ஊடகவியலாளர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் பலத்த வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

### புதிய கட்டட....

இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியை போராளி பாலதாஸ் ஏற்றிவைத்தார். அமரர் டொக்டர் பொன்னம்பலத்தின் திருவுருவப் படத்துக்கு ஈகச்சுடரேற்றி மலர்மாலையை டொக்டர் கெங்காதரன் அணிவித்தார்.

பின்னர் டொக்டர் கெங்காதரன், க.வே.பாலகுமார் ஆகியோர் உரை நிகழ்த்தினர். தொடர்ந்து சிறப்புரையினை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நிகழ்த்தினார்.

## கருணாவை கூட்டிச்செல்லவில்லை அமைச்சர் அனுரா மறுக்கிறார்!

விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து நீக்கப்பட்ட கருணாவை தாம் சிங்கப்பூருக்கு அழைத்துச் சென்றதாக கொழும்பில் வெளிவந்த செய்தியை அநுரா பண்டாரநாயக்கா நிராகரித்தார்.

கைத்தொழில் சுற்றுலா முதலீட்டு அமைச்சர் அநுரா பண்டார நாயக்கா தற்சமயம் சீனாவில் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டிருக்கிறார்.

கருணாவை தான் கூட்டிச் செல்லவில்லை என்று அங்கிருந்தே அவர் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

கருணா விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருப்பதாக எழுந்த குற்றச்சாட்டுக்களை மறுக்கிறேன். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கே.சிவாஜிலிங்கம் இந்தக் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார். இந்தச் செய்தி முற்றிலும் தவறானது.

கருணா என்ற பெயர் உள்ள ஒருவரை சந்திக்கவோ, காணவோ அல்லது கதைக்கவோ இல்லை. அவர் இயக்கத்தில் இருந்து பிரிந்து செல்வதற்கு முன்னரோ அல்லது அதற்குப் பின்னரோ எனக்கு அவரிடம் எதுவித தொடர்புமில்லை.

இனந்தெரியாத நபர்களை எந்த ஒரு நாட்டுக்கும் நான் அழைத்துச் சென்றது கிடையாது என்றும் அனுரா பண்டாரநாயக்கா மேலும் தெரிவித்துள்ளார்.

### சடலத்துடன்...

லத்துடனேயே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

இதில், வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் மனிதஉரிமை மற்றும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க நோர்வே உட்பட வெளிநாடுகள் அனைத்தும் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் ஈ.பி.டி.பியினர் கோரிக்கை விடுத்தனர்.

### சமாதானப்...

எனினும் - இதற்காக முன்வைக்கப்படும் யோசனைகள் இறுதித் தீர்வை நோக்கிச் செல்வதற்கான எதிர்பார்ப்புடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை பிரச்சனைக்கு முழுமையான தீர்வாக அமையமாட்டாது. நாளை நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெலகிசன் இலங்கைக்கு வரவுள்ளார்.

கடந்த சில மாதங்களாக நோர்வே அனுசரணையாளர்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தேவையான அடிப்படை விடயங்களை முன்னெடுத்து வருவதாகவும் ஜயந்த தனபால மேலும் தெரிவித்தார்.

## கறுப்பு ஜூலை தினமான நாளை கடைகளை மூடக் கோரிக்கை!

கறுப்பு ஜூலை தினமான நாளை யாழ்.மாவட்டதிலுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை மூடி, கறுப்பு தினமாக அனுட்டிக்குமாறு யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் அனைத்து வர்த்தகர்களுக்கும் அறிவித்துள்ளது.

கறுப்பு யூலை தினத்தையொட்டி யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் நேற்று மாலை வெளியிட்ட செய்தியிக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிகரெட்டின் விலை விரைவில் உயர்வு!

(கொழும்பு)

சிகரெட் வகைகளின் விலை விரைவில் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

உற்பத்திச்செலவு அதிகரிப்பைத தடுபபதற்கே, சிகரெட் விலையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கு அரச அங்கீகாரம் பெறப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

சிகரெட் விலை அதிகரிக்கப்போவதான செய்திகள் அடிபடத் தொடங்கியதையடுத்து, கொழும்பு உட்பட்ட நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள சிகரெட் விற்பனையாளர்கள் மற்றும் முகவர்கள் பெருமளவு சிகரெட்டைக் களஞ்சியப்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கடந்த 2003 டிசெம்பரில் இறுதியாக சிகரெட் விலைகள் அதிகரிக்கப்படடிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரதேசவாதம் பேச முற்பட்டவர்...

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுக் கொழும்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காலத்துக்குக் காலம் பிரதேச வாதம் பேசப்பட்டு வந்திருக்கின்றது. ஆனால், அந்த நிகழ்வுகள் எல்லாம் கருமேகங்கள் மறைந்தது போல் அடிபட்டுப்போய் விடுகின்றன.

கருணா எந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் கட்சி ஆரம்பிக்கப் போகின்றார் என்பது எவருக்குமே தெரியாது. கட்சிகள் வரலாம் போகலாம்.

89 ஆம் ஆண்டுத் தேர்தலில் பல குழுக்கள் கட்சியாகப் போட்டியிட்டன. அதில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப் பட்டுமுள்ளனர். ஆனால், பின்னர் 97 ஆம் ஆண்டில் அவர்கள் எப்படித் தோல்வியைத் தழுவினார்கள், மக்கள் எப்படி அவர்களை நிராகரித்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே தமிழர்கள் மத்தியில் ஒற்றுமை ஏற்படவேண்டும். கட்சிகள் ஒன்றாக இணையவேண்டும் என்பதன் காரணமாகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

இப்படியான சூழலில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைப் பொறுத்தமட்டில் தமிழ்மக்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

மட்டக்களப்பில் இடம்பெறுகின்ற கொலைகள் சம்பந்தமாக அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்து, இராணுவப் புலனாய்வுப் பிரிவு இதில் ஈடுபட்டுள்ளது என்று அவருக்குத் தெரியப்படுத்தினோம். அது சம்பந்தமாக விசாரணை நடத்துவதாக ஜனாதிபதி கூறினார்.

ஆனால், உண்மையில் இந்த சமாதான முயற்சியை, யுத்த நிறுத்தத்தை விரும்பாதவர்கள் இதைக் குழப்பவேண்டுமென்ற தீயசக்திகள் ஒன்றாக இணைந்து சமாதான முயற்சியை முறியடிக்க நினைக்கிறார்கள். இது சம்பந்தமாக அரசுக்கு எமது நிலைப்பாட்டை அவ்வப்போது இறுக்கமாகத் தெரிவிப்போம்.

இடைநிறுத்தப்பட்ட பேச்சுவார்த்தை உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் தமிழீழத் தாயகம்தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் வேட்கை, புலிகள் சமஷ்டி அமைப்புக்கு இறங்கி வந்தபடியால்தான் இடைக்கால நிர்வாக சபையை முன் வைத்துள்ளார்கள் என்றார்.

The Royal College of Jaffna

ஆங்கிலம் படிக்கின்றீர்களா, புத்திசாலியாகவும் இருக்கின்றீர்கள். ஆனால் கதைக்க முடியவில்லையா? கவலை வேண்டாம்.
Spoken English By :
விக்கினேஸ்வரன் ஆச்சாரி :
426, (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம்,
பிளாக் வீதி, சங்கானை. (சி-2734)

## படையினர் - புலிகள் சந்திப்பின்போது...

முதல் சுமார் இரண்டு மணிநேரம் நடந்த இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், மாவட்ட பிரதேச தளபதிகளான வசந்த், குணம் ஆகியோரும், படைத் தரப்பில் மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன், பிரிகேடியர் சகீர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நேற்றைய சந்திப்பில் இரண்டு முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன. திருமலை மாவட்டத்தின் தமிழர் பிரதேசங்களில் சமாதான ஒப்பந்தத்திற்கு பின்னர் திடீர் திடீரென பௌத்த விகாரைகள் அமைக்கும் பணிகள் நடந்தன. இந்த நிலைமைகளால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இனிவரும் காலங்களில் புதிதாக விகாரைகள் ஏதாவது அமைக்கப்படுமாக இருந்தால் விடுதலைப் புலிகளுடனும் அரசாங்க அதிபருடனும் கலந்துரையாடி தீர்க்கமான முடிவுகளை எடுப்பதாகவும் அதற்கு முன்னர் புதிதாக விகாரைகள் எதையும் அமைப்பதில்லையென இணக்கம் ஏற்பட்டது.

மேலும் குரங்குபாஞ்சான் பகுதியில் அண்மையில் விறகு வெட்டச் சென்ற முஸ்லிம்கள் மீதான நடவடிக்கை குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இப்பகுதிக்குள் எவரையும் தாம் அனுமதிப்பதில்லை எனவும் இது தமது பாதுகாப்பு பிரதேசமெனவும் அத்துடன் அந்தக் காட்டுப் பிரதேசத்திற்குள் ஏறத்தாள ஒவ்வொரு நாளும் 40, 50 வரையான வண்டில்களுடன் சென்று பச்சை மரங்களை தறித்துச் செல்வதாகவும் எனவே இவற்றைக் கட்டுப்படுத்தவே தாம் அவர்கள் மீது சிறு தடைகளை ஏற்படுத்தியதாகவும் இது திட்டமிட்ட ரீதியில் காடுகளை அழிக்கும் முயற்சியெனவும் எழிலன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அரச சட்டத்தில் காடுகளை அழிப்பதும், பச்சை மரங்களை அழிப்பதும் குற்றமாகும். எனவே இதனைத் தாம் ஏற்றுக் கொள்வதாக படைத் தரப்பினர் தெரிவித்தனர்.

இனிவரும் காலங்களில் மாவட்டத்தில் ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் உடனடியாகப் பேசித் தீர்ப்பதெனவும் இரு பகுதியினரும் இணக்கம் கண்டனர்.

அத்துடன் இரண்டு வாரங்களுக்கு முன்னர் புல்மோட்டைக்கு எழிலன் சென்ற வேளை வானாறுப் பகுதியில் வைத்து இராணுவத்தினரும் படையினரும் தடுத்து நிறுத்தியது தொடர்பாகவும் நேற்றைய சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சம்பவம் நடந்தவேளை தான் கொழும்பில் இருந்ததாகவும் எனவே இதை உடன் தீர்க்க முடியவில்லை எனவும் இனிவரும் காலங்களில் என்ன பிரச்சினை ஏற்பட்டாலும் தான் உடனடியாகத் தீர்த்து புலிகளின் அரசியல் பணிக்கு எவ்வித இடைஞ்சலும் ஏற்படாத வகையில் பார்ப்பதாகவும் படை அதிகாரி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார்.

அத்துடன் திருமலை மாவட்டத்தில் ஒப்பந்தத்திற்கு எவ்வித பிரச்சினையும் ஏற்படாமலிருக்க தான் விரும்புவதாகவும் புலிகளும் அவ்வாறே செயற்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் சுமார் 45 நிமிடம் கண்காணிப்புக் குழுவின் தலைமையில் பேச்சு நடந்த போதிலும் பின்னர் கண்காணிப்புக் குழுவின் அதிகாரி இன்றி புலிகளும் படையினரும் தனியாகச் சந்தித்ததாகவும் இரு பகுதியினரும் சில விடயங்களை மனம் திறந்து கலந்துரையாடியதாகவும் இந்தச் சந்திப்பு மிகவும் சுமுகமான முறையில் இடம்பெற்றதாகவும் எழிலன் தெரிவித்தார். (04,10)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.